J.M.C

பக்கங்கள் எட்டு
விலை ரூபா 5-00
Registered as a News Paper in SriLanka

# வலம்புரி
# VALAMPURI

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்
அர்ச்சனா ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
[ஓ-2127]

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஆனி 16 சனிக்கிழமை (30-06-2001) தொலைபேசி: 3378 ஒலி: 201

## அரசாங்கத்தைப் பதவி விலகக் கோரி
# மேல்மாகாணத்தில் 35 இடங்களில்
# ஐ.தே.கட்சி இன்று எழுச்சிப்பேரணி!

### ரணில், காமினி, லொக்கு - கலந்துகொள்வர்

(நமது நிருபர்)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு நாட்டுமக்களின் நம்பிக்கையை தற்போது இழந்துள்ளதால் அரசாங்கம் உடனடியாகப் பதவி விலக வேண்டுமென்றுகோரி ஐக்கிய தேசியக் கட்சி இன்றுகாலை 10 மணிமுதல் மேல் மாகாணத்தில் 35 இடங்களில் ஆர்ப்பாட்டங் களும், ஊர்வலங்களும் நடத்தவுள்ளது.

மேல்மாகாணத்தில் கொழும்பு, கம்பஹா, களுத்துறை ஆகிய மூன்று மாவட்டங்களிலுமே இந்த 35 ஆர்ப்பாட்ட எழுச்சி ஊர்வலங்களை இன்று காலை முதல் நடத்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்கள் ஏற்பாடுகள் செய்துள்ளனர்.

கொழும்பு மாவட்டத்தில் மட்டும் சுமார் பத்து இடங்களில் இந்த ஆர்ப்பாட்ட எழுச்சி ஊர்வலங்களும் மேற்கொள்ளப்படவுள்ளன.

ஒவ்வொரு மாவட்டத்திலும் மேற்கொள்ளப்படவுள்ள இந்த ஆர்ப்பாட்டங்களும் எழுச்சி ஊர்வலங்களும் அந்தந்த மாவட்டங்களில் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்கள் ரணில் விக்கிரமசிங்கா, கரு ஜயசூரியா, காமினி அத்துக்கோறளை ஆகியோரும், எம்.பிகளும் கலந்துகொள்ளவுள்ளனர்.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்கொள்ளவுள்ள பொது ஜன ஐக்கிய முன்னணி அரசிற்கு மேலும் நெருக்கடி நிலையை ஏற்படுத்துவதற்காகவே இந்த ஆர்ப்பாட்டங்களும் எழுச்சி ஊர்வலங்களும் நடத்தப்படவுள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கொழும்பு, கம்பஹா, களுத்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## நெடுங்கேணியில் ஷெல்வீச்சு
## கேண்டாவில் வாசி மரணம்

(வவுனியா)

இராணுவக்கட்டுப்பாடற்ற வவுனியா வடக்கு நெடுங்கேணிப்பகுதியில் மக்கள் செறிந்துள்ள குடியிருப்புப் பகுதிகளை நோக்கி இராணுவத்தினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான எறிகணைத்தாக்குதலின் போது குடும்பஸ்டர் ஒருவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டுள்ளார். இவரது வீடும் பலத்தசேதத்திற்குள்ளானது.

இந்த கண்மூடித் தனமான எறிகணைத்தாக்குதல் நேற்று காலை இடம்பெற்றுள்ளது;

இச்சம்பவத்தில் கேண்டாவில பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து நெடுங்கேணி 18ம்கட்டையில் வசித்துவந்த ஏழுபிள்ளைகளின் தந்தையான இராசையா சீனிவாசகம் (வயது48) என்பவரே கொல்லப்பட்டவராவார்.

நெடுங்கேணிப் பிரதேசம் இராணுவத்தினரின் பிடியில் இருந்து விடுதலைப்புலிகளி

(8 ஆம் பக்கம் பார்க்க)

# நம்பிக்கையில்லாப்பிரேரணை மூலம் அரசைதோற்கடிக்க முடியாது

### அமைச்சர் பட்டிவீரக்கோன் தெரிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி பெரும்பான்மை பலத்தைபெற்றுக்கொண்டாலும் நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் அரசை தோல்வியடையச் செய்யமுடியாது என நீதியமைச்சர் பட்டி வீரக்கோன்தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் மத்தியில் அரசுக்கான ஆதரவுகுறைந்திருந்தால் மாத்திரமே இவ்வாறானபிரேரணை ஒன்றைச் சமர்ப்பிக்க முடியும் ஆனால் ஐ.தே. கட்சியானது அரசுமீது எந்தவொருஅடிப்படையும் இல்லாமல் முஸ்லீம் காங்கிரசை சேர்ந்தசிலர் அரசோடு பிளவுபட்டு நிற்பதை ஆதாரமாகவைத்துக் கொண்டு இப் பிரேரணையை சமர்ப்பித்துள்ளது

இதிலிருந்து புலிகளுக்கு ஆதரவான தமிழ் கட்சிகளுடன் ஐ.தே. கட்சி இரகசிய உடன்பாடு வைத்துள்ளது தெளிவாகின்றது இதேவேளை இவ்வாறான சதித்திட்டத்திற்கு எதிராக பொதுமக்களை அணி திரட்டும்பொறுப்பு பொ.ஜ. ஐக்கிய முன்னணிக்கு இருக்கிறது என்றும் அமைச்சர் பட்டிவீரக்கோன் மேலும் தெரிவித்தார். (ந-8)

## பின்வரிசை எம். பிக்கள் வாக்களிக்க மாட்டார்கள்
### ரஞ்சித் நவரத்தின எம்.பி

(கொழும்பு)

அரசாங்கத்தின் மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கை இல்லாத் தீர்மானத்திற்கு பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் ஆதரவாக வாக்களிக்க மாட்டார்கள் என்று ஆளும்கட்சிப் பாராளுமன்றஉறுப்பினர் ரஞ்சித் நவரத்தின தெரிவித்துள்ளார்.

அரசாங்கக்கட்சி எம்.பிக்களில் சிலர் அரசுக்கு எதிராக வாக்களிப்பார்கள் என்று ஐக்கியதே கட்சிசெய்துவரும் பிரசாரத்தில் எவ்விதமான உண்மையும் இல்லைஎன்று அவர்மேலும் தெரிவித்தார்.

அரசுக்கு எதிராக ஐக்கிய

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தேசிய அரசு அமைக்க வர்த்தகர்கள் கோரிக்கை

(கொழும்பு)

நாட்டின் இன்றைய சூழ்நிலையில் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசும் ஐக்கியதேசியக் கட்சியும்சேர்ந்து தேசிய அரசு ஒன்றை அமைக்கவேண்டுமென்று கொழும்பில் உள்ள வர்த்தகசமூகம் இருசாராரிடமும் வேண்டுகோள்விடுத்துள்ளது.

இந்த வேண்டுகோள் அடங்கிய கடிதத்தில் பிரபலதொழில் அதிபர்களும் வர்த்தகர்களும் ஒப்பமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது. [வ]

## இ.தொ.காங்கிரஸ் அரசுக்கு தொடர்ந்தும் ஆதரவு

(கொழும்பு)

பொதுஜன ஐக்கியமுன்னணி அரசுக்கெதிராக ஐக்கிய தேசியக்கட்சி கொண்டுவந்துள்ள நம்பிக்கைஇல்லாத் தீர்மானத்தை எதிர்க்கப்போவதாகவும் தொடர்ந்தும்தமது ஆதரவை அரசுக்கு வழங்கப்போவதாகவும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் செயலாளரும் அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமான் வாக்குறுதிஅளித்துள்ளதாக பொதுஜன ஐக்கியமுன்னணியின் செயலாளரும் அமைச்சருமான டி.எம்ஜயரத்தினா தெரிவித்துள்ளார்.

ஐக்கியதேசிக்கட்சிஅரசுமீது கொண்டுவந்துள்ள நம்பிக்கை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தீவகப் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை

(ஊர்காவற்றுறை)

தீவகப் பாடசாலைகளில் ஆசிரியர் வெற்றிடங்கள் நீண்ட காலமாக நிரப்பப்படாதிருப்பதனால் மாணவர்கள் பெரும் பின்னடைவுகளை எதிர் நோக்கியுள்ளதாககூறப்படுகிறது.

அனலை தீவுசதாசிவம் மகாவித்தியாலயத்தில் புவியியல் பாடத்திற்கு ஆசிரியர் இல்லாததுடன் கரம்பொன் சண்முகநாதன் மகாவித்தியாலயத்தில் சித்திரம் வர்த்தகம் சுகாதாரம் ஆகியபாடநெறியைபோதிப்பதற்கான ஆசிரியர்களுக்குபற்றாக்குறை இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-75)

## ஜனாதிபதி இன்று நாடு திரும்புவார்

[கொழும்பு]

ஜனாதிபதிசந்திரிகா குமாரதுங்கா தனதுலண்டன் பயணத்தை முடித்துக்கொண்டு இன்று நாடு திரும்பவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி நாடுதிரும்பியகையோடு அமைச்சர்கள் கட்சிஅமைப்பாளர்கள் எம்.பிக்கள் அடங்கிய கூட்டமொன்றைநாளை கூட்டவுள்ளார்

இக்கூட்டத்தில் நம்பிக்கை இல்லாத்தீர்மானத்தைதோற்கடிக்க எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக புதியயுக்திகள்வகுக்கப்படவுள்ளதாக அரசவட்டாரங்கள் தெரிவித்துள்ளன: [வ]

## நவாலியில் இளைஞன் சுட்டுக்கொலை

[யாழ்ப்பாணம்]

நவாலிப்பகுதியில் நேற்றுக் காலை இளைஞர்ஒருவர் இராணுவத்தினரால்சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இராணுவத்தினர் நடத்திய தேடுதலின்போதே இவர் சுட்டுக் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது சடலம் யாழ்போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ந-5)

## வன்னியிலிருந்து வருவோர் வவுனியாவில் கைது

வவுனியாவில் இராணுவக் கட்டுப்பாட்டு பகுதியில் இளைஞர்கள் யுவதிகள் கைதுசெய்யப்படுவது தினமும் அதிகரித்து வருவதாக வவுனியாவில் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இக்கைதுகள் அதிகரித்து வருவது தொடர்பாக சம்மந்தப் பட்டவர்கள் மனித உரிமைகள் ஆணைக்

[8ஆம் பக்கம் பார்க்க]

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

திருமந்திரம், திருவாசகம், திருக்குறள், திருஅருட்பா பகவத்கீதை, தாயுமானவர் பாடல், சிவயோகசுவாமிகள் அருளிய நற்சிந்தனை இன்னும் தெய்வீக நூலகள் பல இருக்கின்றன. தொடர்பு 135 சிவன்கோயில் முன்பாக நல்லூர், யாழ்ப்பாணம் நேரம் மாலை 2.00-6.00 வரை. (3293)

நலன் புரிச்சங்கம்

## அழைப்பு

(மருதனார்மடம்)

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவிலிருந்து இடம் பெயர்ந்த ஆலய பூசகர்கள் மற்றும் அரசாங்க சேவையிலுள்ள குறைந்த வருமானம் பெறுவோர்களை எதிர்வரும் 4 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 00 மணிக்கு புனர்வாழ்வு அமைச்சின் அலுவலகத்துக்கு வருமாறு பச்சிலைப்பள்ளி பிரதேச இடம்பெயர்ந்தோர் நலன்புரிச்சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (உ-23)

காற்றடித்தவர்

## காயம்

பெற்றோமாக்ஸிற்குக் காற்றடித்த இளைஞரொருவர் அதுவெடித்ததால பலத்த காயங்களுக்குளளாகி வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை வி. எம் வீதியைச் சேர்ந்த திருத்துநரான மயில்வாகனம பிரேமச்சந்திரன் [வயது 36] என்பவரே காயமடைந்தவராவார். (உ,52)

## இன்று கலை நிலா அரங்கு

(யாழ்ப்பாணம)

யாழ்- திருமறைக் கலாமன்றத்தில் நடந்த 23 ஆம் திகதி நடைபெற இருந்து ஒத்திவைக்கப்பட்ட கலைநிலா அரங்க நிகழ்வுகள் இன்று மாலை மன்ற அரங்கில் நடைபெற வுள்ளது. விசேட நிகழ்வாக ''ஏகலைவன் கூத்து'' இடம்பெறவுள்ளது. [செ-104]

## வருடாந்த பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டக் கூடைப்பந்தாட்ட சங்கத்தின் பொதுக்கூட்டம் இன்று பி.ப. 3.30 மணிக்கு யாழ் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது. (செ)

மரண விசாரணை

## அதிகாரி

### விபத்தில் காயம்

(புலோலி)

சாவகச்சேரி திடீர் மரண விசாரணை அதிகாரி எஸ். குமாரவேல் (வயது 50) யாழ்ப்பாணத்திலிருந்து துன்னாலைக்குமோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த வேளை இராணுவ வாகனத்துடன் ஏற்பட்ட விபத்தில் சிக்கி காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-52)

# விட்டுக்கொடுக்கும் தீர்மானத்திற்கு எதிராக செயற்பட சிஹல உறுமய தயங்காது

## எச்சரித்து அறிக்கை வெளியீடு

(கொழும்பு)

ஜனாதிபதியோ, பதில் ஜனாதிபதியோ, எதிர்க்கட்சித் தலைவரோ, தலிபான்களான முஸ்லிம் காங்கிரசுக்கோ அல்லது புலிகளின் ஆதரவாளர்களான ரெலோ கூட்டணிக் கட்சிகளுக்கோ விட்டுக்கொடுத்துத் தீர்மானங்கள் எடுத்தால் அவர்களுக்கெதிராக சிஹல உறுமய செயற்படத்தயங்காது.

இவ்வாறு சிஹல உறுமய நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையொன்றின் மூலம் எச்சரிக்கை செய்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எமது இந்த வெளிப்பாடுகளை மாவனல்லையில் முஸ்லிம்கள் வன்முறையிலீடுபட்டதை அறிந்தவர்கள நன்றாகவே விளங்கிக் கொள்வர்;

இத்தகைய சம்பவங்கள் மூலம் முஸ்லிம் தீவிரவாதிகளை இனங்காண முடிந்தமை பற்றி சிஹல உறுமய மகிழ்ச்சியடைகிறது.

சிஹல உறுமயவின் அபிப்பிராயம் சரியானதே என்பதை கல்முனை மாவட்டக் கோரிக்கை, நாடுமுழுவதிலும் முஸ்லிம்களுக்குத் தனியான சட்ட சபைகள் அமைக்க வேண்டுமென்று விடுவிக்கப்படும் கோரிக்கைகள் நிரூபிக்கின்றன. (உ)

## ஆலய புனரமைப்புக்கு நிதி

(யாழ்ப்பாணம்)

அத்தியடிப் பிள்ளையார்ஆலயத்தைப் புனரமைக்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் வடக்கின் புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபையின் நிதியிலிருந்து 3 இலட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது. (உ)

## சிவமகாராசாவின்சேவை நலன்பாராட்டுவிழா இன்று

[யாழ்ப்பாணம்]

கூட்டுறவாளரும் யாழ். மாவட்டநாடாளுமன்றஉறுப்பினருமான சின்னத்தம்பி சிவமகாராசாவின் சேவைநலன் பாராட்டு விழாவும் கூட்டுறவுத்தீபம் சிறப்புமலர் வெளியீடும் இன்று பி.ப 2.30 மணிக்கு தெல்லிப்பளை ப.நோ.கூ. சங்க விழா மண்டபத்தில்இடம்பெறவுள்ளது.

தெல்லிப்பளை ப.நோ.கூ. சங்கம் ஏற்பாடு செய்திருக்கும் இவ்விழா, அதன் தலைவர் ச. தனபாலசிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வின் ஆசியுரைபாராட்டுரைகளை அறிஞர்கள்சமயப் பெரியார்கள் பலரும் ஆற்றவுள்ளனர்.

'கூட்டுறவுத் தீபம்' சிறப்பு மலர் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக பட்டமேற்படிப்புபீடாதிபதிபேராசிரியர் அ. சண்முகதாஸும் ஆய்வுரையையாழ் பல்கலைக்கழக அரசறிவியல் சமூகவியல் துறைத்தலைவர் கலாநிதி என். சண்முகலிங்கனும் வழங்கவுள்ளனர். (உ)

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

ஜூன மாதம்27 ஆம்திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி வெளிமாவட்டங்களுக்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச ரீதியாகத் தரப்படுகிறது.

| | |
|---|---|
| 191022 ஏ | 191022 பி |
| 191022 சி | 191022 டி |
| 191022 ஈ | 191022 எவ் |
| 191023 ஏ | 191027 ஏ |
| 191042 ஏ | 191047 ஏ |
| 191057 ஏ | 191071 ஏ |
| 191093 ஏ | 191093 பி |
| 191148 ஏ | 191151 ஏ |
| 191151 பி | 191177 ஏ |
| 191189 ஏ | 191201 ஏ |
| 191202 ஏ | 191207 ஏ |
| 191227 ஏ | 191984 ஏ |
| 191984 பி | 193023 ஏ |
| | 193024 ஏ |
| 193045 ஏ | 193046 ஏ |
| 193063 ஏ | 193063 பி |
| 193308 ஏ | 193308 பி |
| 193427 ஏ | 193427 பி |
| 193448 ஏ | 193479 ஏ |
| 193479 பி | 193479 சி |
| 193479 டி | 195176 ஏ |
| 195176 பி | 195176 டி |
| 195207 ஏ | 195218 ஏ |
| | 196263 ஏ |
| 195266 ஏ | 195276 ஏ |
| 195284 ஏ | 195724 ஏ |
| 196176 சி | |

### கோப்பாய்

| | |
|---|---|
| 185964 ஏ | 187263 ஏ |
| 189153 ஏ | 189153 பி |
| 189154 ஏ | 189208 ஏ |
| 189208 பி | 190783 ஏ |
| 190783 பி | 190783 சி |
| 190764 ஏ | |

### நல்லூர்

| | |
|---|---|
| 148224 ஏ | 148224 பி |
| 148224 சி | 148224 டி |
| 163054 ஏ | 163054 பி |
| 163054 சி | 173460 ஏ |
| 173460 பி | 178076 ஏ |
| 178076 பி | 178076 சி |
| 178354 ஏ | 178354 பி |
| 179792 ஏ | 180041 ஏ |
| 182244 ஏ | 182244 பி |
| 185989 ஏ | 185989 பி |
| 185989 சி | 186032 ஏ |
| 186032 பி | 186032 சி |
| 186117 ஏ | 186175 ஏ |
| 186311 ஏ | 186311 பி |
| 186311 சி | 186311 டி |
| 186311 ஈ | 188842 ஏ |
| 188842 பி | 188886 ஏ |
| 188886 பி | 188886 சி |
| 188950 ஏ | 188976 ஏ |
| 188976 பி | 188976 சி |
| 188976 டி | 189018 ஏ |
| 189018 பி | 189024 ஏ |
| 189162 ஏ | 189178 ஏ |
| 189178 பி | 189178 சி |
| 189178 டி | 189210 ஏ |
| 189218 ஏ | 189239 ஏ |
| 189239 பி | 189251 ஏ |
| 189251 பி | 189253 ஏ |
| 189287 ஏ | 190770 ஏ |
| 190770 பி | 190789 ஏ |
| 190848 ஏ | 190851 ஏ |
| 190853 ஏ | 190864 ஏ |
| 190869 ஏ | 190869 பி |
| 190869 சி | 190869 டி |
| 190874 ஏ | 190874 பி |
| 190874 சி | 190874 டி |
| 190892 ஏ | 190918 ஏ |
| 190918 பி | 190918 சி |
| 190925 ஏ | 190925 பி |
| 190927 ஏ | 190927 பி |
| 190932 ஏ | 190938 ஏ |
| 190949 ஏ | 190963 ஏ |
| 190978 ஏ | 191018 ஏ |
| 191031 ஏ | 191031 பி |
| 191031 சி | 191048 ஏ |
| 191048 பி | 190166 ஏ |
| 191079 ஏ | 191079 பி |
| 191215 ஏ | 191215 பி |
| 191215 சி | 193325 ஏ |
| 193325 பி | 193325 சி |
| 193325 டி | 193478 ஏ |
| 193478 பி | 193478 சி |
| 193478 டி | 193491 ஏ |
| 195237 ஏ | 182272 ஏ |
| 189403 ஏ | 189466 ஏ |
| 189466 பி | 190563 ஏ |
| 190650 ஏ | 190650 பி |
| 190687 ஏ | 191790 ஏ |
| 191965 ஏ | 192039 ஏ |
| 192040 ஏ | |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 182788 ஏ | 185102 ஏ |
| 185207 ஏ | 185243 ஏ |
| 186854 ஏ | 186854 பி |
| 186934 ஏ | 187015 ஏ |
| 188628 ஏ | 188628 பி |
| 188628 சி | 188701 ஏ |
| 188711 ஏ | 188711 பி |
| 188711 சி | 189320 ஏ |
| 189418 ஏ | 189492 ஏ |
| 189492 பி | 189543 ஏ |
| 189591 ஏ | 199599 ஏ |
| 189599 பி | 190463 ஏ |
| 190485 ஏ | 190485 பி |
| 190485 சி | 190485 டி |
| 190501 ஏ | 190501 பி |
| 190546 ஏ | 190564 ஏ |
| 196570 ஏ | 190570 பி |
| 190570 சி | 190599 ஏ |
| 190600 ஏ | 190600 பி |
| 190600 சி | 190625 ஏ |
| 190628 ஏ | 190640 ஏ |
| 190660 ஏ | 190660 பி |
| 190665 ஏ | 190666 ஏ |
| 190674 ஏ | 190741 ஏ |
| 191754 ஏ | 191754 பி |
| 191760 ஏ | 291812 ஏ |
| 191812 பி | 191837 ஏ |
| 191837 பி | 191837 சி |

(தொடரும்)

## பல்கலை சேவைகளுக்கான சம்பள நிதியைப்பெறுவதில் பெரும் நெருக்கடி

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களின் சேவைகளுக்கு, சம்பளம் மற்றும்சம்பள அதிகரிப்பு நிலுவைகளை வழங்குவதற்கான நிதியைப் பெற்றுக் கொள்வதில் பெரும் நெருக்கடி நிலைமைகளை எதிர்நோக்குவதாக உயர் கல்வியமைச்சர் இந்திக குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதற்காக எட்டுக்கோடி டொலர் நிதி தேவைப்படுவதாகவும் நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் இந்நிதியைப் பெற்றுக் கொள்வது பெரும் கஷ்டமாகஇருப்பதாவும் மேலும் தெரிவித்துள்ளார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் பலநோக்கு ஆராய்ச்சி நிலையத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகத்தில் இத்தகைய நிலையம் ஒன்று அமைக்கப்படுவது இதுவே முதற்தடவையென்பது குறிப்பிடத்தக்கது: (செ)

## தொடர்பு கொள்ளுமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கீழே பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர் யாழ். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் உடன்தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்;

சிதம்பர பிள்ளை- சிவனேஸ்வரி பாசை வாடி வீதி மறவன் புலவு சாவகச்சேரி, (செ)

## விலை குறைப்பு

(கொழும்பு)

அத்தியாவசியப் பொருட்களான எரி வாயுவின் விலை 50 ரூபாவாலும் பால்மா வகைகளின் விலை 18 ரூபாவாலும் குறைக்கப்படவுள்ளதாகவும், மற்றும் எரிபொருள் மின்சாரம் என்பவற்றின் விலை குறைப்புப் பற்றியும் ஆராயப்படுவதாக அமைச்சர் டி. எம். ஜயரத்ன தெரிவித்துள்ளார்: [வ-8]


## பிற்போடப் பட்டுள்ளது

இன்றுநடைபெறவிருந்த யாழ்.மாவட்ட கலைக்கல்லூரியின் வளர்ச்சி நிதிக்கான அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்புதவிர்க்க முடியாத காரணத்தினால் 29.07.2001 க்கு பிற்போடப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம்;

பொதுச் செயலாளர்

கலைக்கல்லூரி,
தலைமைககாரியாலயம்,
மல்லாகம்;

[3294]



திருமறைக் கலாமன்றம் நடத்தும்

## கலை நிலா அரங்கு

(மாதாந்த அரங்க நிகழ்வு)

காலம்:- 30.6.2001 சனிக்கிழமை (இன்று)
நேரம் :- மாலை 6. 15 மணி
இடம் :- மன்ற அரங்கு

நிகழ்ச்சிகள்

★ நடனங்கள் ★ குழுப்பாடல் ★ கிற்றார்இசை

சிறப்பு நிகழ்ச்சி

''ஏகலைவன்'' நாட்டுக்கூத்து

பிரவேசம்; இலவசம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமறைக் கலாமன்றம்.

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
தொ. பே. இல: 021-2393

[C-2147]

# மக்கள் வங்கிக்கு அகவை நாற்பது

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியின் 40வது ஆண்டு நிறைவுவிழா நாளை காலை 8.00 மணிக்கு கன்னாதிட்டி வீதியில் அமைந்துள்ள மக்கள் வங்கியின், பிரதேச தலைமைக்காரியாலயத்தில் கொண்டாடப்படவுள்ளது.

அன்றையதினம் மக்கள் வங்கியின் கிளைகள்யாவும் காலை 9.00 மணிமுதல் பி.ப 2.00 மணிவரை கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளுக்காகத் திறந்திருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# குடிசன மதிப்பீட்டு கொடுப்பனவு கிடைக்காத பயிற்சியாளர் ஏமாற்றம்

(ஈச்சமோட்டை)

2001 ஆம் ஆண்டுக்கான குடிசன மதிப்பீட்டில் ஈடுபடுவோருக்கான பயிற்சிவகுப்புகளில் கலந்து கொண்டவர்களுக்குரிய கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பயிற்சியாளர்களுக்கே ஒரு மாதத்திற்கு மேலாகியும் கொடுப்பனவுகள் வழங்கப்படாமையால் அவர்கள் ஏமாற்றம் அடைந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளிலிருந்து பயிற்சி வகுப்புக்களில் கலந்து கொண்டவர்களுக்கான கொடுப்பனவுகள், பயிற்சி வகுப்புக்கள் முடிந்த உடனேயே வழங்கப்பட்டு விட்டனவாம். (செ-59)

# வறுமையின் கொடுமை பெண் நஞ்சிடம் தஞ்சம்

(யாழ்ப்பாணம்)

குடும்பத்தில் நிலவிய வறுமையால் மன விரக்தியுற்ற பெண் அலரிவிதை உட்கொண்டு தனதுயிரை மாய்த்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இச்சம்பவத்தில் சிறுப்பிட்டி மேற்கைச் சேர்ந்த ராஜசிங்கம் ஜெகதீஸ்வரி (வயது 32) என்பவரே மரணமடைந்தவராவார்.

அச்சுவேலி அரசினர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் வழியில் இவர் மரணமானதாக தெரியவந்துள்ளது. (உ-104)

# பாடசாலைக்கு முன்பாக மினிசினிமா அரங்கு

## பெற்றோர் அதிருப்தி

(ஊர்காவற்றுறை)

அனலைதீவில்லுள்ள சதாசிவம் மகா வித்தியாலயத்திற்கு முன்பாக மினிசினிமாக் கொட்டகை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதனால் மாணவர் சினிமாப்பக்கம் திசை திரும்பும் ஆபத்து நிலை ஏற்பட்டிருப்பதாகவும்,

அவர்களது கல்விச் செயற்பாட்டிற்கு இடையூறு ஏற்பட்டு வருவதாகவும் பெற்றோர் தரப்பில் அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, மேற்படி மினிசினிமாக் கொட்டகையுடன் இணைத்து அனலைதீவில் 4 சினிமாக் கொட்டகைகள் இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது. (உ-75)

# பாதிக்கப்பட்ட மீனவர்கள் உடன் உதவி கோரி அமைச்சருக்கு கடிதம்

(நெல்லியடி)

வடமராட்சி கிழக்கில் இருந்து இடம்பெயர்ந்து, கடற்றொழில் உபகரணங்கள் இல்லாத காரணத்தினால் மீன்பிடித்தொழிலில் ஈடுபடாதிருக்கும், மீனவர்களுக்கு வேண்டிய உபகரணங்களை வழங்குமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கு இடம்பெயர்ந்தோர் நலன்புரிச சங்கத்தினரே அமைச்சருக்குக்கடிதம் மூலம் மேற்படி கோரிக்கையினை விடுத்துள்ளனர்.

அவர்களால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் பின்வருமாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நாகர்கோவில் கிழக்கு, யாமுனை நாகர்கோவில் மேற்கு, செம்பியன்பற்று, தாளையடி, மருதங்கேணி, வத்திராயன், உடுத்துறை, ஆழியவளை, வெற்றிலைக்கேணி ஆகிய 10கிராமங்களைச் சேர்ந்த 353 குடும்பங்கள் கடற்றொழில் உபகரணங்களின்றி மீன்பிடித்தொழிலில் ஈடுபடாது பல வேறு கஷ்டங்களுக்குள்ளாகியுள்ளனர்.

இவர்களுக்கு தேவையான கடற்றொழில் உபகரணங்களை உடனடியாக தந்துதவுமாறு கேட்டுக் கொள்கிறோம். (உ-23)

# இராணுவ பொலிஸார்சிலர் உயர்மட்டவிசாரணையில்

(கொழும்பு)

கொஹோவலவிலஇராணுவ முகாமிலிருந்து நான்கு பிஸ்டல்கள்காணாமல் போனமை தொடர்பாக இராணுவ பொலிஸ் பிரிவின் உயர் அதிகாரிகள் சிலர் விசாரணைக்குட்படுத்தப்பட்டதாக இராணுவ உயர்வட்டாரங்கள் செய்திவெளியிட்டுள்ளன.

இதுவிடயம் தொடர்பாக குறிப்பிட்ட இராணுவ முகாமின் களஞ்சியப் பொறுப்பாளர் விசாரணைமுடிவடையும் தறுவாயில் மரணமடைந்ததால் விசாரணையின் தீவிரத்தை மேலும் அதிகரித்துள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ-க]

# தாச்சி சுற்றுப்போட்டி இறுதிநிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் வலம்புரி பத்திரிகை நிறுவனத்தின் ஆதரவில அண்ணா சனசமூக நிலையமும், விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் மாபெரும் தாச்சிச் சுற்றுப்போட்டி இறுதி நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் நாளை ஞாயிற்றுக் கிழமை பி.ப 4.00 மணிக்கு நடைபெறவுள்ளன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேசசபைத் தலைவர் க.மணிபல்லவராஜனும்,

வலம்புரி பத்திரிகைநிறுவன நிர்வாக இயக்குநர் எஸ்.வெற்றிவேலாயுதம், வலி தெற்கு பிரதேச சபைத் தலைவர் க. கமலசேகரன், யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத் தலைவர் கா. பீதாம்பரம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ)

# இராசி பலன்

30-16-2001
[ஆனி 16, சனி]
தசமி மு.ப 9 07 வரை
சித்திரை காலை 6 43 வரை
இராகுகாலம் 8.56- 10.26
நல்லநேரம் 1.26- 2.56

**மேடம்**
அபூர்வ சந்திப்பு, சுவாரஸ்யம், விருந்தோம்பல், காரியம் நிறைவேறும்.

**இடபம்**
மனமகிழ்ச்சி, தொழில் விருத்தி, ஆரோக்கியம், முயற்சி நன்மை.

**மிதுனம்**
உஷ்ண வியாதி, குடும்பக் கவலை, காரிய தாமதம், வியாபார மேன்மை.

**கடகம்**
கலகம் மேன்மை, உறவினர் மனஸ்தாபம், பெண்களால் உறவு. முயற்சி தாமதம்.

**சிங்கம்**
வாக்குப் பலிதம், சுபமுயற்சி, நல்ல சம்பவம், பிரயாணம்.

**கன்னி**
வீண் செலவு, வாக்குவாதம், காரிய தாமதம், கௌரவக் குறைவு.

**துலாம்**
பெரியோர் ஆசி, நல்ல முயற்சி, சயனசுகம், போசன சுகம்.

**விருச்சிகம்**
வீண் அலைச்சல், சுப செலவு, மேம்படுதல், தந்தை வழி உறவு.

**தனுசு**
செல்வாக்கு, நண்பர்கள் சந்திப்பு, பொருள் வரவு, காரிய நன்மை.

**மகரம்**
கடின உழைப்பு, தொழில் வெற்றி, சுபநிகழ்வு, முயற்சி கைகூடும்.

**கும்பம்**
அச்சமான நிலை, புதிய திட்டமிடல், காரியதாமதம், பிரயாணம்.

**மீனம்**
பிரயாண பயம், எதிர்பாராத பிரச்சினை, வியாதி, முயற்சி தடங்கல்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

## மணிபல்லவத்தில் மஹோற்சவம் 10 ஆம் நாள்



# 'நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை'

## மஞ்சமதில் வந்தருள்வாய்!

அஞ்சும்படி துன்பங்கள்
அவலங்கள் மிஞ்ச
நெஞ்சுமிகு துயரோடு
நின்னடியைக் கெஞ்ச
அஞ்சுகமே வந்தடைந்தோம்
ஆழ் அலைகள் விஞ்ச
மஞ்சமதில் வந்தருள்வாய்
மயல் நீக்கிக் கொஞ்ச!

நயினைச்சோதி

## கற்பூர ஒளியில் கண்டேன்

கடல் கடந்து ஓடியே வந்து
கருணை மழைக்காய் காத்திருந்தோம்
மடமை தெரிய களைந்த மங்கையே
மனமிரங்காய் நயினை அம்மையே
உடல் தளர்ந்து நடை மெலிந்து
உன் வரவுக்காய் வீற்றிருந்தோம்
விடை தரவே கற்பூர ஒளியில்
வீதியுலா வந்தாய் அம்மா!

கவிஞர் துரைபரி

## நலம் தரும் பூசணித் தாயே

நலம் பல நல்கிடுவாய் நம் பூசணித்தாயே-தமிழ்
நிலம்தரணியில் தினம் சிறக்க வைப்பாய் நீயே-ஆழிசூழ்
நலம் தனிலே நிதம் தரிசனம் தந்திடு தாயே
வலம் வந்தோர் வாழ்வினிலே நல்வரத்தை
வழங்கிடு நீயே
அலை கடல் நடுவே அருளாட்சி செய்யும்மா
குலை நடுங்கித் தவிக்கிறோம் நம்குறை தீரும்மா
-நம்
நிலைகண்டு குறைதீர்க்க நித்தம் நீ வாருமம்மா
கலைந்த உறவுகளும் களிக்க வரம் தருமம்மா

வா.செந்தில்குமரன்
க.கு.அ.இ 139

## புதுவசந்தம் தாருமம்மா

உயர்வுக்கு உதாரணமே அழகேஸ்வரி!
உன்னை தினம் வணங்குகின்றோம் நயினையம்மா!
நயமுடனே உன்னை அர்ச்சனை பாடுகின்றோம்!
நாகபூமியில் அமர்ந்திருக்கும் நாகம்மா!
தாமரையிலே வரம் தருவாய் மனமுவந்தே!
தயவுடனே நலங்கள் பல தாவம்மா!
புயலையே அடிநலமாய் தேவியம்மா!
புவிசிறக்க புதுவசந்தம் தாருமம்மா!

வி.அனிந்தா

## வேதனைகள் தீர்த்திடம்மா!

நாக பூஷணித் தாயே
நயினைப் பதி கொண்டவளே
நோக வீழ்ந்து துடிக்கின்ற
நேயமான உன் மக்கள்
தாகமான அமைதியினை
தரணியிலே தான் மலரவே
வேகமாக வந்திடம்மா
வேதனைகள் தீர்த்திடம்மா
சோகமான எமது வாழ்வை
சோபிதமாய் மாற்றுதற்கு
நாக குடை ஏந்தி வந்து
நம்மையெல்லாம் காத்திடம்மா!

சூரியநிலா
க.கு.அ.இல-15

க. பொ. த. உயர்தர மாணவர்க்கான

# உயிரியல்

## பாட வினாக்கள் - 20

ஆசிரியர்: கே. சுகந்தன் B. Sc

1) தற்போசணிகள் சம்பந்தமாகப் பின் வரும் கூற்றுக் களுள் சரியானது எது?
   1) அவையாவும் ஒளியைச் சக்தி மூலமாகப் பயன்படுத்தும்;
   2) அவை ஒளிச்சக்தியை மூலமாகப் பயன்படுத்துவதோடு ஒட்சிசனை இலத்திரன் மூலமாகப் பயன்படுத்தும்.
   3) அவை காபனீரொட்சைட்டைக் காபன் மூலமாகவும் அசேதனப் பதார்த்தங்களை அல்லது ஒளியைச் சக்தி மூலமாகவும் பயன்படுத்தும்.
   4) அவை ஒளியைச் சக்தி மூலமாகவும் சேதனப்பதார்த்தங்களைக் காபன் மூலமாகவும் பயன்படுத்தும்;
   5) அவை சக்தி மூலமாகச் சேதனச் சேர்வைகளையும் காபன் மூலமாகக் காபனீரொட்சைட்டையும் பயன்படுத்தும்.

2) தாவர அசைவுகள் சம்பந்தமாகத்தவறானது எது?
   1) ஒளித்திருப்பத்தில் அசைவின் திசை தூண்டலுக்கு அப்பாலாக இருக்கும்.
   2) ஒளித்திருப்பத்தின் ஆராய்ச்சியில் Charles Darwin என்பவரே முதல் முயற்சியாளர் ஆவார்;
   3) ஒளித்திருப்ப அசைவுகளில் தண்டின் ஒளிபடாத பக்கத்திலேயே கலநீட்சியை ஒட்சின் தூண்டுகிறது;
   4) சில வேர்கள் எதிர்ப்புவித்திருப்பமுள்ளவை;
   5) Mimosa இன் இலை அசைவும் இலைவாய் அசைவும் வீக்கவசைவுக்கான உதாரணங்களாகும்.

3) உயர் தாவரத்தின் ஒரு கலத்தில் அதி கூடியளவு ATP மூலக் கூறுகள் தோற்றுவிக்கப்படுவது;
   1) கிளைக்கோப் பகுப்பின் போது
   2) கிரப்பின் வட்டத்தில்
   3) இலத்திரன் இடமாற்றச் சங்கிலியில்
   4) ஒளித்தாக்கத்தில்
   5) ஒளிச் சுவாசத்தின்போது

4) ஒளித் தொகுப்புப் பற்றிய கண்டுபிடிப்புகளில் Van Nell என்பவரின் கண்டு பிடிப்பு எது?
   1) காபனீரொட்சைட்டின் பங்கு
   2) H - வழங்கிகளின்பங்கு
   3) நீரில் இருந்து ஒட்சிசன் தோற்றுவிக்கப்படல்;
   4) ஒளியில் தங்கிய தாக்கங்களும் ஒளியில் தங்காத தாக்கமும்
   5) பச்சைய உருமணிகளில் ATP தொகுப்பு.

5) C 4 தாவரங்கள் தொடர்பாகப் பிழையான கூற்று எது?
   1) கலன் கட்டுகள் தடிப்படைந்த கலச்சுவர்களைக் கொண்ட புடைக்கல விழையக் கலங்களால் சூழப் பட்டிருத்தல்.
   2) இருவகையான பச்சைய உருமணி காணப்படல்;
   3) PGA இன் தாழ்த்தலில் RUBISCO பங்கு கொள்ளல்
   4) காபனீரொட்சைட் முதலில் PEP இனால் பதிக்கப் படும்.
   5) காபனீரொட்சைட்டின் ஈடுசெய் நிலையின் பெறுமானம் மிகக் குறைவு.

6) நீரின் அதியுயர்ந்த சதவீதத்தைக் கொண்டுள்ளஇழையம்,
   1) குருதி 2) கசியிழையம் 3) சிற்றிடவிழையம்
   4) கொழுப்பிழையம் 5) என்பு

7) பின்வருவனவற்றில் எது ஒரு பெரு மூலக்கூறு?
   1) ATP 2) ரெஸ்ரோஸ்ரெரோன் 3) யூரியா
   4) ஈமொகுளோபின் 5) சுக்குரோஸ்

8) ஒளி நுணுக்குக் காட்டியின் உயர் பிரிப்பு வலு அண்ணளவாக உடல் நலமுள்ள மானிடக் கண்ணின் அவ்வலுவின்
   1) 5000 மடங்கால் உயர்வானது
   2) 500 மடங்கால் உயர்வானது
   3) 1000 மடங்கால் உயர்வானது
   4) 50 மடங்கால் உயர்வானது
   5 100 மடங்கால் உயர்வானது

9) பெரொக்சிசோம்கள்
   1) இலை சொசோமின் ஒரு வகையாகும்
   2) நொதியக் கற்றலேசைக் கொண்டது
   3) முகடுகளைக் கொண்டது
   4) இலிப்பிட்டுக்களைக் கொண்டது
   5) கதிர் உருவாக்கத்துடன் சம்பந்தப்பட்டது

10) விலங்குக்கலம் ஒன்றிலே காற்று சுவாசத்தின் போது சுவாச இலத்திரன் கொண்டு செல்லற் சங்கிலியினூடாகக் குளுக்கோசின் ஒரு மூலக்கூறில் இருந்து தொகுக்கப்படும் ATP மூலக் கூறுகளின் எண்ணிக்கை
   1) 8 2) 18 3) 22 4) 34 5) 38

11) பின்வருவனவற்றில் எது கோடேற்றா கணத்தின் ஒரு சிறப்பான இயல்பு அன்று?
   1) குதத்தின் பிற்புறவால் 2) வயிற்றுப்புற இதயம்
   3) முள்ளந்தண்டு 4) தொண்டைப் பூப்பிளவு
   5) குடற்சூழிய உடற்குழி

12) மொலக்காப் பிராணிகளுக்குத் தனித்தன்மையான ஓர் அம்சம்
   1) முப்படை இயல்பு 2) வறுகி 3] மென்உடல்
   4) திறந்த குருதிச் சுற்றோட்டத் தொகுதி 5] மூளையத் திரட்டுகள்

13) எதிலே கருக் கொண்ட செங்குருதிக் கலங்கள் காணப்படுவது இல்லை?
   1) காகங்கள் 2] திமிங்கிலங்கள் 3] முதலைகள்
   4) மரத்தவளைகள் 5] திலாப்பியா

14) பின்வரும் அம்சங்களில் எது ஒரு தனிக்கணத்திற்கு வரையறுக்கப் பட்டுள்ளது?
   1) அகவன்கூடு 2] துரொக்கோபோகுடம்பி 3] புறஓடு
   4] செதில்கள் 5) ஏட்டு நுரையீரல்

# விடைகள்

**வினா இல - 14 (தொடர்ச்சி)**

**வினா - 03**

i)

| | ஒட்டுண்ணி | தொற்றும் பருவம் | தொற்றும் முறை | நோய் |
|---|---|---|---|---|
| 1) | plasmodium vivax | வித்திச் சிற்றுயிர் | நுளம்பு செலுத்தும் உமிழ்நீர் மூலம் | மலேரியா |
| 2) | Entamoeba histolytica | 4கருக்கொண்ட சிறப்பை நிலை | உணவு, நீர் மூலம் | அமீபா வயிற்றுளைவு. |
| 3) | Necator americanus | L3 குடம்பி | கால், கைமூலமாக | குருதிச்சோகை |
| 4) | Wuchereria bancrofti | 3ம் குடம்பி | நுளம்பின் உமிழ்நீர்மூலம் | யானைக்கால் நோய் |
| 5) | Ascaris Lumbricoides | 2ம்குடம்பியைக் கொண்ட முட்டை | உணவு, நீர்மூலம் | குருதிச் சோகை குடல்புண்; |

J) Plasmodium Vivax

- நோயாளிக்கு சிகிச்சையளித்தல்.
- நுளம்பு குத்தாது தடுத்தல் (நுளம்புத்திரி, நுளம்பு வலை பாவித்தல்)
- தொற்றுதலைத் தடுக்கும் மருந்துகளை உட்கொள்ளல் (Chloroquine);
- Pyrethroid மருந்தை விசிறி நிறை உடலி நுளம்பை அழித்தல்.
- பயன்படுத்தாத நீர்நிலைகளில் எண்ணையை விசிறி நுளம்பின் குடம்பி, கூட்டுப்புழுக்களை அழித்தல்.
- நுளம்புக குடம்பிகள், கூட்டுப்புழுக்களை உண்ணும் மீன்களைநீர்நிலையில் வளர்த்தல்
- வீட்டுச் சூழலில் நீர் தேங்காது தடுத்தல்.
- Vaccination செய்தல்:- இதன்போது Plasmodium இன் இறந்த உடலை விருந்துவழங்கியின் குருதியினுள் செலுத்தி ஒட்டுண்ணிக்கு எதிர்ப்புடைய பிறபொருள் எதிரியை உற்பத்தியாக்கல். (செயற்கையான உயிர்ப்பாகப் பெற்ற நிர்ப்பீடனம்).

Entamoeba histolytica

- நோயாளிக்குச் சிகிச்சையளித்தல்;
- உணவு உண்ண முன்பு கைகள், நகங்களை சவர்க்காரத்தால் கழுவுதல், கொதித்தாறிய நீரைப் பருகுதல், ஈ, கரப்பான் மொய்க்காது உணவை மூடி வைத்தல், திறந்த வெளிகளில் மலம் கழித்தலைத்தவிர்த்தல், கீரை, மரக்கறிகளை நன்கு கழுவி அவித்து உண்ணல், மலம் கழித்தல் பின்பு கைகளைநன்கு கழுவுதல், பழங்களை மரக்கறிகளை உப்பு நீரால் அல்லது $KMnO_4$ இனால் கழுவுதல், வளமாக்கியாக மலத்தைப்பாவிப்பதைத் தவிர்த்தல் போன்ற தற்சுகாதார முறைகளை மேற்கொள்ளல்;
- சுகாதார வசதியுள்ள மலசலகூடங்களை அமைத்தல், குடிக்கும் நீருடன் மலக்கழிவு கலத்தலைத் தடுத்தல் போன்ற தற்சுகாதார முறைகளை மேற்கொள்ளல்.
  கடைகளில் உணவுகளை திறந்துவைத்து விற்றலைத் தடுதல், ஈபெருகும் இடங்களை அழித்தல் போன்ற பொதுச்சுகாதார முறைகளை மேற்கொள்ளல்;

Necator americanus

- மலகூடங்களைப் பாவித்தல்;
- பாதணிகளைப் பாவித்தல்;
- நோயாளிக்குச் சிகிச்சையளித்தல்;
- மலத்தை உரமாகப் பாவிப்பதைத் தவிர்த்தல்;
- கொதித்தாறிய நீரையும் சமைத்த உணவையும் பாவித்தல்;
- மண்ணைக் கையாழும்போது கையுறைகளைப் பாவித்தல்;
- பொதுமக்கள் தொற்றுதல்பற்றி விழிப்பாக இருக்கவேண்டும்;

Wuchereria bancrofti

- நோயாளிச் சிகிச்சையளித்தல்;
- தொற்றுதல் ஏற்படுத்தலைத் தவிர்த்தல்:-இதற்கு நுளம்புத்திரி, நுளம்புவலை, Citronella எண்ணை போன்றன பாவிக்கப்படும்;
- மருந்துகளை விசிறி நிறைஉடலி நுளம்பை அழித்தல்;
- பயன்படுத்தாத நீர்நிலைக்கு எண்ணை விசிறல்;
- நுளம்பின் கூட்டுப்புழு, குடம்பிகளை உண்ணக்கூடிய மீன்களை நீர்நிலையில் வளர்த்தல்;
- வீட்டுச் சூழலில் நீர் தேங்காது தடுத்தல்;

Ascaris lumbricoides

- மல கூடங்களைப் பாவித்தல்;
- குடம்பியின் முட்டைகள் நீர், உணவுடன் சேர்வதைத் தடுத்தல்;
- மக்களுக்கு சுத்தமான நீரை விநியோகித்தல்;
- கொதித்தாறிய நீரைப் பருகுதல்;
- நோயாளிக்குச் சிகிச்சையளித்தல்;

**வினா இல-4**

1) a) தாய் கருவில் உள்ள நிறமூர்த்த எண்ணிக்கைக்குச் சம எண்ணிக்கையான நிறமூர்த்தங்களைக் கொண்ட கருக்களைத் தோற்றுவிக்கும் பிரிவு, இழையுருப்பிரிவாகும்; தாய்க் கருவில் உள்ள நிறமூர்த்த எண்ணிக்கையிலும் பார்க்க அரைமடங்காக்கப் பட்ட நிறமூர்த்தங்களைக் கொண்ட கருக்களை உண்டாக்கும் பிரிவு ஒடுக்கற்பிரிவாகும்;

b)

| ஒடுக்கற் பிரிவு | இழையுருப் பிரிவு |
|---|---|
| இனப் பெருக்கக் கலங்களில் நிகழும் | உடற் கலங்களில் நிகழும் |
| இருமடியக் கலங்களில் நிகழும் | எல்லா மடியமான கலங்களிலும் நிகழும் |
| கரு இரண்டு தடவை அடுத்தடுத்து பிரியும் | கரு ஒரு தடவை மட்டும் பிரியும் |
| 4 மகட் கருக்கள் தோன்றும் | இரு மகட் கருக்கள் தோன்றும் |
| மகட் கருக்கள் தம்மிடையே பிறப்புரிமையியலில் வேறுபட்டிருக்கும் | ஒத்திருக்கும் |
| மிகவும் சிக்கலான நீண்ட முன்னவத்தை I காணப்படும் | குறுகிய சிக்கலற்ற முன்னவத்தை காணப்படும் |
| முன்னவத்தை I மேலும் 5 நிலைகளாகப் பிரிக்கப்படும் | அவ்வாறில்லை |
| அமைப்பொத்த நிறமூர்த்தங்கள் சோடி சேரும் | அவ்வாறில்லை |
| கோப்புக்கள் தோன்றும் | தோன்றாது |
| குறுக்குப் பரிமாற்றம் நிகழும் | இல்லை |
| அனுஅவத்தை I இன் போது கலத்தின் மதிய கோட்டுத் தளத்தில் நிறமூர்த்தங்கள் அமைப்பொத்த சோடிகளாக அடுக்கப்படும் | அனுஅவத்தையின் போது கலத்தின் மத்திய கோட்டுத் தளத்தில் தனித்தனி நிறமூர்த்தம் அடுக்கப்படும் |
| ஒவ்வொரு மையப் பாத்தும் கலத்தின் ஒரு முனையிலிருந்து தோன்றும் கதிர் நாரால் மட்டும் இணைக்கப்படும் | ஒவ்வொரு மையப் பாத்தும் இரு முனையில் இருந்தும்தோன்றும் கதிர் நார்களால் இணைக்கப்படும் |
| ஒடுக்கற்பிரிவு Iல் மையப்பாத்து பிளப்பதில்லை. ஒடுக்கற்பிரிவு II இலே பிளக்கும் | மையப்பாத்து பிளக்கும் |
| மேன்முக அவத்தை இன் போது நிறமூர்த்தமே கலத்தின்எதிரெதிர் முனையை நோக்கிச் செல்லும் | மேன்முக அவத்தையின் போது புன்னிறமூர்த்தமே கலத்தின்எதிரெதிர் முனையை நோக்கிச் செல்லும் |
| மகட் கருக்களில் நிறமூர்த்த எண்ணிக்கை அரைப்பங்காக்கப்படும் | மாற்றமில்லை |
| ஒடுக்கற் பிரிவு I ல் நிறமூர்த்தங்கள் அடுக்கப்பட்ட தளத்திற்குச் செங்குத்தாக ஒடுக்கற் பிரிவு IIல் அடுக்கப்படும் | அவ்வாறில்லை |
| ஒடுக்கற் பிரிவு I இல் கதிர்நார் உண்டாகிய தளத்திற்குச் செங்குத்தான தளத்தில் ஒடுக்கற்பிரிவு IIஇல் உண்டாகும் | அவ்வாறில்லை |

[அடுத்த சனிக்கிழமை தொடரும்]

## இன்று ஒரு தகவல்

# நாயின் நன்றி மறவாமை

சிவராம் சேட் வட்டிக் கடை வைத்து நகைமீதும் நம்பிக்கையானவர்களிடம் பண மீதும் பணம் கொடுத்து வாங்கிப் பெருமிதமாக வாழ்ந்தார். தன்பால் வந்து யாசிப்பவர்களுக்கு முடிந்தவரை தானம் தருமம் செய்து வந்தார். அவரிடம் அறிவுள்ள நாய் ஒன்று இருந்தது. நாய்க்கு நன்றி அதிகம் உண்டு. சேட் குதிரை மீது வெளியூர்களுக்குப் போய் வரும் போது அப்போதும் நாய் உடன் சென்றுவரும். நாய்க்கு உணவு தந்து குழந்தை போல் அவனிடம் சேட் அன்பு காட்டி வந்தார்.

ஒரு நாள் சேட் குதிரை மீது வெளியூர் சென்றார். வழக்கம் போல நாய்உடன் சென்றது. வெளியூரில் வசூலான பணத்தை ஒரு பையில கட்டுக் கட்டி குதிரை மீது வைத்துத் தம் ஊரை நோக்கிப் புறப்பட்டார். வழியில் சோலை சூழ்ந்த ஒரு தாமரைக் குளம், அங்கு இறங்கிக் குளத்தில் கை, கால், முகம் கழுவி நீர் பருகினார். சற்று இளைப்பாற வேண்டிக் குளக் கரையில் ஆலமரத்தடியில் பணப்பையைத் தலையணையாக வைத்து உறங்கினார். உடம்பில் உள்ள அசதியாலும் தரையின் வசதியாலும் அயர்ந்து நன்கு தூங்கி விட்டார் சேட். சூரியன் அஸ்தமனம் ஆனான்.

சேட் திடுக்கிட்டுக் கண் விழித்து எழுந்தார். சற்று இருட்டத் தொடங்கியது. ஐயோ நாம் பணத்துடன் இருக்கிறோமே! கள்வர்பயம் உள்ள இடம் ஆயிற்றே! அயர்ந்து தூங்கிவிட்டோமே' என்று மனத்துக்குள் நினைத்துத் தம்முடைய அறியாமையை நொந்து கொண்டார்; அந்த அதிர்ச்சியினால் பணப்பையை மறந்து குதிரை மீது ஏறிக் கடும் வேகமாகப் புறப்பட்டார். நாய் இதனைக் கவனித்தது "எஜமானர் பணப்பையை மறந்துவிட்டுப் போகின்றாரே, உணவு கொடுத்து நம்மைக்காக்கும் தலைவனுடைய பணத்தை யாரும் அபகரித்துப் போகக் கூடாதே," என்று எண்ணி உள்ளம் நொந்தது. இந்த விஷயத்தைச் சேட்டுக்குக் குறித்துச் சொல்ல அதற்கு வாய் இல்லை. குதிரையைப் போகவிடாமல் குறுக்கே வந்து குரைத்து மறித்தது. சேட்டு "நாம் அவசரமாகப் போகிறோம். இந்த நாய்இப்போது நேரகாலம் தெரியாமல் நம்மோடு விளையாடுகிறதே' என்று எண்ணினார். சாட்டையால் அதை அடித்தார். பணத்தையாரும் அபகரிக்கக் கூடாதேயென்று எண்ணிய நாய் பணம் இருக்கின்ற இடத்துக்கு ஓடிப்போய்ப் பார்த்தது. பணப்பையைக் கண்டு களித்தது. மறுபடியும் ஓடிவந்ததுஎஜமானனைமறித்தது.

சேட்டுசீற்றமடைந்து சாட்டையால் பல முறை நாயை அடித்தார். அடியைத் தாங்கிக் கொண்டு நாய்வாலை அசைத்தது. குதிரையைத் தடுத்தது. மறுபடியும் பணப்பை உள்ள இடத்துக்கு ஓடிப்போய்ப்பார்த்தது. மறுபடியும் குடல் தெறிக்க ஓடி வந்து குதிரையைத் தடுத்தது அப்போது இரவு எட்டு மணியாயிற்று. சேட்பெருங் கோபம் அடைந்தார். இந்த நாய்க்குப்பைத்தியம் பிடித்து விட்டது போலும் என்று எண்ணி ரிவால்வரை எடுத்து நாயைச் சுட்டு விட்டார்.

நாய்குண்டுபாய்ந்து உதிரம் ஒழுக ஓடிப் பணப்பையின் மீது தலைவைத்துப் படுத்து விட்டது. அதன் உயிர்உள்ளும புறமும் ஊசலாடிக் கொண்டிருந்தது எஜமான் வரவில்லையே என்று அவர்வரும்வழி மேல் விழிவைத்துக் கொண்டு குண்டு அடிபட்ட வேதனையுடன் இருந்தது. சேட் வீட்டுக்குப் போய்க் குதிரையை விட்டு இறங்கினார்; பணப்பையைப் பார்த்தார் இல்லை. பதறினார். 'ஆ! அவசரத்தில் பணப்பையை எடுக்கவில்லை. அதனால் தான் நம் அறிவுள்ளநாய் நம்மைப் பலமுறை தடுத்தது. நாம் புத்தியில்லாமல் புத்தியுள்ள நாயைச் சுட்டு விட்டோமே! என்று எண்ணி அழுதார்.

மறுபடியும்குதிரைமீது ஏறி வாயு வேகமாகப் பறந்து சென்றார். தாம் தங்கிய குளத்தருகில் சென்றார். பணப்பையைக் கண்டார். அதன்மீது தலையைவைத்துக் குடல்சரியப் படுத்திருந்த நாயையும் பார்த்தார். உடையவரிடம் உடமை சேர்ந்து விட்டது. நாய் ஆறுதல் அடைந்துதன் வாலைச்சிறிது அசைத்துக் கண்ணை மூடி விட்டது. அதன் ஆருயிர் பிரிந்தது. நாயின் நன்றி நிறைந்த நல்லறிவை எண்ணிச் சேட் கதறிக் கதறிஅழுதார். பணப்பையையும் இறந்தநாயையும் குதிரைமீது வைத்து வீட்டுக்குவந்தார். அவருக்குத் தாங்கமுடியாத துயரம். மறுநாள் நாயைப் புதைத்து அதன் மீது வைரவருடைய சூலத்தை வைத்து அபிஷேகம் செய்தார். இவர் ஆயுள் உள்ள வரை மறவாது நினைந்து நினைந்து நெஞ்சம் நெகிழ்ந்தார்.

- நன்றி -
அறநெறி

# யாழ்ப்பாணத்தில் பெண் பத்திரிகையாளரை காண்பது அபூர்வமாகவே உள்ளது

## யாழ். மேலதிக அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச ரீதியில் பெண்கள் பத்திரிகைத்துறையில் செல்வாக்குப் பெற்று வருகின்ற இவ் வேளையில் யாழ்ப்பாணத்தில் பெண் பத்திரிகையாளர்களைக் காண்பது அரிதாகவே உள்ளது.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபையின் மகளிர் குழுத் தலைவி திருமதி ரதி சோதிலிங்கம் தலைமையில் கடந்தசனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் இடம் பெற்றபெண் பத்திரிகையாளருக்கான பயிற்சி நெறியின் ஆரம்ப வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ்ப்பாணம் மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

இவ் வைபவத்தில் தொடக்க உரையாற்றிய யாழ் பல்கலைக்கழக நுண்கலைப் பீடத் தலைவர் கலாநிதி சபா. ஜெயராசா தமது உரையில், பத்திரிகைத் துறையில் ஆற்றலும் ஆர்வமும் உடைய பெண்கள் பலர் இருந்தும் அன்னலட்சுமி இராசதுரை போன்ற ஒரு சிலர் மட்டுமே பத்திரிகைத் துறையில் புகழுடன் விளங்குகின்றனர் இந் நிலைமை நிச்சயம் மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் படித்து விட்டு வேலையற்று இருக்கும் இளம் பெண்களுக்கு வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் பெண்களை பத்திரிகையாளர்களாக மாற்றும் வகையில் யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையின் மகளிர் குழுவின் ஏற்பாட்டில் இடம் பெறும் இப் பயிற்சி நெறி முறை போற்றத்தக்கதாகும்.

பல்வேறு விதமான பயிற்சி நெறிகளை யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை நடத்தி வருகின்றமை பாராட்டுக்குரியது என்றார்.

யாழ் மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவர் பொ. கனகசபாபதி, செயலாளர் சு. சிப்பிரமணியம் உட்பட பிரமுகர்கள் பலர் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

100 மணித்தியாலயங்கள் கொண்ட இப் பயிற்சி நெறியில் யாழ். பல்கலைக் கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், சிரேஷ்ட பத்திரிகையாளர்கள் சட்டத்தரணிகள், நீதிபதிகள், உட்பட பலரும் விரிவுரை ஆற்றி வருகின்றனர்.

சனி, ஞாயிறு தினங்களில் இடம்பெறும் இப் பயிற்சி நெறியில் சுமார் 30 இளம் பெண்கள் பயிற்சி பெற்று வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. [உ]

## பதற்றம் தணிவு

(யாழ்ப்பாணம்)

நீர்கொழும்பு குடாப்பாடு பகுதியில் ஏற்பட்ட மோதல் சம்பவத்தையடுத்து அப்பகுதியில் நிலவிய பதற்றத்தைத் தணிக்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆவன செய்துள்ளார். (உ)

## பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் புனரமைப்பும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 30 மணிக்கு நல்லை ஞான சம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது. (உ)

## வங்கிகள் யூனியன் எதிர்ப்பு

(யாழ்ப்பாணம்)

அரச வங்கிகளை தனியார் மயமாக்க அரசாங்கம் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளுக்கு இலங்கையிலுள்ள வங்கிகளின் யூனியன்கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இதனை வெளிப்படுத்தும் வகையில் யாழ். அரச வங்கிகளில் எதிர்ப்பை தெரிவிக்கும் வாசகங்களுடன்கூடிய பதாகைகள் கட்டப்பட்டுள்ளன. (இ-11)

## உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம)

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் நடத்தும அகில இலங்கை ரீதியிலான 19 வயதுக்குட்பட்டோருக்கான 'எவரெடி. வெற்றிக்கிண்ண விலக்கல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் முதலாவது சுற்று நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப 4.00 மணிககு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

முதலாவது சுற்றில் யாழ். உதைபந்தாட்ட லீக் அணிக்கு எதிராக பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணி மோதவுள்ளது. [உ]

# பூரான் கடிக்கு இலக்கான சிறுமி பரிதாப மரணம்

[மந்திகை]

நித்திரையில்இருந்தவேளை பூரான்கடிக்கு இலக்கான சிறுமி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மரணமானாள்.

மீசாலையில் இருந்து இடம் பெயர்ந்து உடுப்பிட்டியில் வசித்து வந்த சிவகுமார் சிந்துஜா (வயது4) என்ற சிறுமியே பூரான் கடிக்கு இலக்காகி வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் இருந்து யாழ். போதனா வைத்தியசாலையில் மேலதிகச் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட சமயம் மரணமானதாகத் தெரியவந்துள்ளது.

இதே வேளை, மேற்படி சிறுமியை வைத்தியசாலையில் அனுமதிக்கும் விடயத்தில் உறவினர் காட்டிய தாமதப் போக்கே இம் மரணத்துக்கு காரணம் என வைத்தியசாலை வட்டாரங்கள் சுட்டிக் காட்டியுள்ளன. [உ-23]

## இன்று பெற்றோருக்கான கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

யாழ். மாநகர சபையும் புனித ஜோன்பொஸ்கோ வித்தியாலயமும் இணைந்து. வித்தியாலய மாணவரது கல்வி மேம்பாடு உருவாக்கல் பற்றிய பெற்றோருக்கான கருத்தரங்கொன்றை இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிமுதல் மு.ப 11.30 மணிவரை. வித்தியாலய அதிபரின் தலைமையில் நடத்தவுள்ளது.

யாழ் நாவலர் கலாசாரமண்டபத்தில் நடைபெறும் மேற்படி நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ் மாநகரசபை முதல்வர் என். ரவிராஜ் கலந்து கொள்வார்.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர் து மகாதேவன் வரவேற்புரையையும் அருட்திரு எஸ். ஜே. இராஜநாயகம் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை முன்னாள் அதிபர் சே. பத்மநாதன் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி எம் மரியதாசன் ஆகியோரும் உரை நிகழ்த்துவர். [இ]

# நூலகங்கள் சிறப்பாக இயங்கினாலே சமுதாயம் வளர்ச்சியுறும்

## பரு. பிரதேச சபைத் தலைவர் தெரிவிப்பு

[புலோலி]

"ஏழைகளின் பல்கலைக்கழகங்கள் நூலகங்களே. கிராமங்கள் தோறும் நூலகங்கள் சிறப்பாக இயங்கும் போது தான் வளர்ச்சியடைந்த நாகரிகமான சமுதாயத்தை உருவாக்க முடியும் நூலக வசதிகள் இல்லாத கிராமங்களில் மக்களின் வாசிப்புதிறன் குறைவடைவதுடன் சமூகச் சீரழிவுகளுக்கும் வழிகோலப்படும்.

மேற்கண்டவாறு பருத்தித்துறை பிரதேச சபையால் குடத்தனையில் 3 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட பொது நூல் நிலையத்தைச் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்து உரையாற்றிய பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஐ. ஸ்ரீரங்கேஸ்வரன் குறிப்பிட்டார்

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது; சமுதாயத்தில் ஏற்படுத்தப்பட வேண்டிய நல்ல மாற்றங்களை நூலகங்கள் மூலம் மேற்கொள்ள முடியும்.

வடமராட்சி கிழக்கு மக்களின் தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதில் நாம் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றோம.

யுத்த காலச் சூழ்நிலையில் வடமராட்சிகிழக்கு போன்ற பகுதிகளில் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வது சங்கடமான நிலையாகவுள்ளது.

தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டவர்கள் அடிமட்ட மக்களுடன் இணைந்து செயற்படும்போது தான் மக்களின் தேவைகள் முழுமையாகப் பூர்த்தியடைந்து அபிவிருத்திகளும் மேம்பாடடையும ஆனால் இன்றைய நிலையிலே அடிமட்ட மக்களுடன் இணைந்து செயற்பட முடியாத நிலையாகவுள்ளது; (உ-52)

# ...ளஞ்சியகாவலாளிகளுக்கு ...வதனம் வழங்கவில்லை

[ஊர்காவற்றுறை]

...ர்காவற்றுறை அரச ...வுக் களஞ்சியத்திற்கு ...லாளிகளாக நியமிக்கப் ...வர்களுக்கு இது வரை ...னம் எதுவும் வழங்கப் படவில்லை எனத் தெரிய வருகின்றது.

இவர்கள் காவலாளிகளாக நியமிக்கப்பட்டு இரண்டு மாதங்கள் பூர்த்தியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-75)

# ...மூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு நிரந்தர நியமனம்

(சங்கானை)

...தென் மேற்குப் பிரதேச ...லர் பிரிவில் கடமையாற் ... சமுர்த்தி அபிவிருத்தி ...தியோகத்தர்களுக்கு ...த செவ்வாய்க்கிழமை ...ப. 2. 30 மணிக்கு நியமன கடிதம் வழங்கும் நிகழ்வு ...தேச செயலர் வேதநாயக... தலைமையில் நடைபெற்...

இந் நிகழ்வில் மானிப்பாய் தொகுதி ஈ.பி.டி.பி அமைப்பாளர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கடந்த வருடம் நியமிக்கப்பட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 23 பேருக்கு நிரந்தர நியமனக் கடிதங்களை வழங்கினார், (உ-123)

# வியக்க வைக்கும் விந்தை நிகழ்வுகள்

★ **நிறம் மாறும் சுவர்கள்!**

வெப்ப நிலைக்கேற்றவாறு நிறம் மாறக் கூடிய வர்ணப் பூச்சு (Paint) ஒன்றை சீன விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.

வீடுகள், அலுவலகங்களின் சுவர்களில் இந்த வர்ணப் பூச்சை பிரயோகிப்பதன் மூலம் வெப்ப நிலை அதிகரிக்கும் காலங்களில் இது தனது நிறத்தை மாற்றி அதன் மூலம் ஏறத்தாழ 4 பாகை செல்ஸியஸினால் வெப்ப அளவை குறைப்பதுடன் குளிர் காலங்களில் வேறு நிறத்துக்கு மாறி 8 பாகை செல்ஸியஸ் அளவு வரை வெப்பத்தின் அளவைக் கூட்டி இதமான கால நிலையைப் பேணுகிறதாம்.

நான்கு வருடங்களிற்கு ஒரு முறை இதனைச் சுவர்களில் பிரயோகிக்க வேண்டும். அப்படி ஆயின் இவ் வர்ணப் பூச்சை Air Condition இன் வில்லன் என்று அழைக்கலாமா?......

★ **செவ்வாயில் ஜீவராசி உண்டா?.......**

சிறிய பக்ரீறியா வடிவங்களில் செவ்வாய்க் கிரகத்தில் உயிரினங்கள் காணப்படுகின்றன என்பது 1996 இல் நாசா வெளியிட்ட நம்பகமான தகவல்.

மேற்படி தகவலை உறுதி செய்யக்கூடிய ஆதாரம் தற்போது கிடைத்துள்ளது அந்தாட்டிக் பகுதியில் 1984 கண்டெடுக்கப்பட்ட விண்வெளிக் கல்லொன்றை தொடர்ச்சியாய் ஆராய்ந்த அமரிக்கா, ஜேர்மனி, ஸ்பானிய விஞ்ஞானிகள் அக்கல்லில் பழைய கால பக்ரீறியாக்களின தடயம் கிடைத்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

2003 இல் செவ்வாய் செல்லவுள்ள விண்கலம் இவ் விடயத்தை மேலும் உறுதி செய்யும். அது வரை காத்திருப்போமே ....

-அவதானி-

# காஷ்மீர் தொடர்பான பேச்சுவார்த்தைக்கு பாக. அதிபரை அழைத்தமைக்கு அமெ. கொடுத்த அழுத்தமே காரணம்

அமெரிக்காவின் வற்புறுத்தலுக்காகவும் காஷ்மீர் தீவிரவாதிகளின் தாக்குதல் நெருக்கடிகளுக்கு அஞ்சியுமே இந்தியா பாகிஸ்தான் அதிபரைப் பேச்சுக்கு அழைத்திருக்கிறது என்று செய்தியேடு ஒன்று தெரிவிக்கிறது.

அந்தச் செய்தியேட்டில் மேலும் கடந்த செவ்வாய் நடந்த கூட்டத்தில் பாகிஸ்தான் அதிபர் காஷ்மீருக்கு விடுதலை வழங்குவதில் சாத்தியமில்லையென்றும், நடக்கப் போகும் உச்ச நிலைக் கூட்டத்திற்கும் இதற்கும் தொடர்பு இல்லையென்றும், குறிப்பிடப்பட்டுள்ளது

இதேவேளை, இந்தப் பத்திரிகைச் செய்திக்கு இந்தியா மறுப்புத் தெரிவித்ததுடன் பாகிஸ்தான் அதிபரைப் பேச்சுக்கு வருமாறு அழைத்தது இந்தியாவின் சொந்த முடிவு என்றும் இதில் எந்த வல்லரசும் தலையிட வில்லையென்றும் தலையிட முடியாதென்றும் இந்திய வெளியுறவுத் தொடர்பு அதிகாரி தெரிவித்தார். (து)

# பொதுமன்னிப்பு வழங்கினால் வீரப்பன் சரணடையத் தயார்

## பழ. நெடுமாறன் அறிவிப்பு

(சென்னை)

பொது மன்னிப்பு வழங்கினால் வீரப்பன் சரணடையத் தயாராக இருப்பதாக தமிழர் விடுதலை இயக்கத்தின் தலைவர் பழ. நெடுமாறன் அறிவித்துள்ளார்.

வீரப்பன் அண்மையில் தனக்கு இருவீடியோ நாடாக்களை அனுப்பி வைத்திருப்பதாகவும், அதில் தமிழக, கன்னட அரசுகள் பொதுமன்னிப்பு வழங்கும் பட்சத்தில் தான் சரணடையத் தயாராக இருப்பதாக கூறியிருப்பதாகவும் செய்தியாளர் மாநாடொன்றில் பழ. நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

மேற்படி இரு வீடியோ நாடாக்களையும் கன்னட, தமிழக அரசுகளுக்கு தான் அனுப்பி வைத்திருப்பதாகவும் நெடுமாறன் மேலும் தெரிவித்தார். (து)

# முஷாரப்பின் முடிவுக்கு அமைச்சர்கள் உடன்பாடு

(ஸ்ரீநகர்)

காஷ்மீர் பிரச்சினை தொடர்பாக முஷாரப் எடுக்கப் போகும் தீர்மானங்களுக்கு தாம் ஆதரவு வழங்கப் போவதாக 19 பாகிஸ்தான் அரசியல் வாதிகள் கூட்டாக அறிவித்துள்ளனர்.

அடுத்த மாதம் இந்தியாவில் நடைபெறவுள்ள மாநாட்டில் பாகிஸ்தான் கலந்து கொள்வதற்கு இவர்கள் 19 பேரும் பூரண ஆதரவு வழங்குவதாக மேலும் தெரிய வருகிறது.

நேற்று முன்தினம் முஷாரப்புடன் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றின் போதே இவர்கள் தமது நிலைப்பாடு குறித்து தெளிவான அறிக்கை ஒன்றை சமர்ப்பித்துள்ளனர். (உ-9)

# 11 பேர்பலி

(புதுடில்லி)

இந்தியாவின் கிழக்கு மாநிலமான பீஹாரில் இடம் பெற்ற வெவ்வேறு கலவரங்களில் 11 பேர் கொல்லப் பட்டுள்ளனர்.

(உ-9

# நைஜீரிய தொழிலாளர் 41 பேர் கடத்தப்பட்டனர்

(லாகூர்)

நைஜீரியாவின் வட பகுதியில் 41 தொழிலாளர்களை இனந்தெரியாத கும்பல் ஒன்று கடத்திச் சென்றுள்ளதாக தொழிலாளர் சங்கத் தலைவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடத்தப்பட்ட 41 பேரிலும் 16 பேர் வேறு நாட்டவர்களாவர் எனினும் இத்தொழிலாளர்கள். எவ்வாறான சூழலில் என்ன காரணத்திற்காக கடத்தப்பட்டார்கள் என்று தெரியவில்லை என நைஜீரிய பொலிஸார் தெரிவித்துள்ளனர். (உ-9)

# வீரப்பன் பிடிபடுவது உறுதியாகி விட்டது

## தேவாரம் தெரிவிப்பு

(சென்னை)

சத்திய மங்கலம் காட்டுக்குள் தேடுதல் வேட்டைக்குச் சென்றுள்ள அதிரடிப்படை, சந்தனக்கடத்தல் வீரப்பனைப் பிடிக்காமல் வெளியே வரமாட்டாது என்று வோல்டர் தேவாரம் தெரிவித்தார்

கடந்த செவ்வாய் உயர் அதிகாரிகள சகிதம் பத்திரிகையாளர்களிடம் பேசுகையில்; கடந்த 21 ஆம் திகதி காட்டுக்குள் புகுந்த அதிரடிப் படையினர் பல ஆயிரக் கணக்கான காட்டுவாசிகளைச் சந்தித்து தகவல்கள் சேகரிப்பதாகவும் கூடிய விரைவில் சந்தனக்கடத்தல் வீரப்பனை சிறைப்பிடித்து விடுவோம் என்றும் தேவாரம நம்பிக்கை தெரிவித்தார். [து]

# அல்பேனிய தேர்தலில் ஆளும் கட்சி வெற்றி

(டிரானா)

நடந்து முடிந்த அல்பேனிய பொதுத்தேர்தலில் ஆளும் சோஷலிஷக் கட்சி வெற்றி பெற்றுள்ளதாக பிரதமர் இலிர் மெதா தெரிவித்துள்ளார்.

எனினும், மேற்படி தேர்தல் தொடர்பான முடிவுகள் திங்கட்கிழமை மாலையே வெளியிட்டு வைக்கப்பட்ட போதிலும் அதற்கு முன்னரே பிரதமர் தமது கட்சியே வெற்றி பெறும் என ராய்டர் செய்திச் சேவைக்கு தொலைபேசிமூலம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிரதமரின் மேற்படி அறிவிப்பைச் சுட்டிக் காட்டிய எதிர்க்கட்சிகள் தேர்தல் முடிவுகளில் அரசு மோசடி செய்துள்ளதாக குற்றம் சாட்டியுள்ளன.

அனால், எதிர்க் கட்சிகளின் இக் குற்றச்சாட்டுகளுக்கு மறுப்புத் தெரிவித்த பிரதமர் இலிர் மெதா 50 வீதத்திற்கும் அதிகமான ஆசனங்கள் தமக்குக் கிடைக்கும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார். (உ-9)

# நீர் யானை தாக்கி பாதுகாப்பு ஊழியர் பலி

(பெரிடோறியா)

நீர்யானை தாக்கியதில், தென்னாபிரிக்காவின் உணவு விடுதி ஒன்றின் பாதுகாப்பு ஊழியர் பலியாகியுள்ளார்.

குறித்த நீர்யானை ஸ்ரொக் மைதானத்தில் மேய்ந்து கொண்டிருப்பதை மிக உன்னிப்பாக கவனித்த ஊழியரை இவரின் கவனிப்பால் தனக்கு ஆபத்துவரப்போகின்றது என்று உணர்ந்தே அந்த ஊழியரை தாக்கியுள்ளதாக வனவிலங்கு ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.

ஊழியரை தாக்கியவேளை நீர்யானையை விரட்ட முயன்ற பலரை அது தாக்கிக் காயப் படுத்தியுள்ளது.

இதனால் நீர்யானையை மயக்கமடையச் செய்வதற்காக ஒருவித மயக்க மருந்து தெளிக்கப்பட்டதில் அது இறந்துவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (உ-7)

## செய்திப்பரல்

★ நைஜீரியாவின் லாபியா நகரில் வசிக்கும் ரிவ், ஒபி இனத்தவர்களிடையே ஏற்பட்ட மோதலில 27 பேர் கொல்லப்பட்டதுடன் 60 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

★ பாகிஸ்தானில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள 196 இந்திய மீனவரை விடுவிப்பதாக பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

★ ஆயுத ஒழிப்புத் திட்டத்தில் இணையும் எண்ணம் பாகிஸ்தானுக்கு இல்லை என இராணுவ ஆட்சியாளர் முஷாரப் அறிவித்துள்ளார்,

★ ஆபிரிக்காவின் பொருளாதார வளர்ச்சிக்கும் ஜனநாயக முன்னேற்றத்திற்கும் உதவப் போவதாக அமெரிக்க ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

(உ-3)

# கென்யா அகதி முகாம் சிறுவர்களில் போஷாக்கு குறைபாடு அதிகரிப்பு

## யுனிசெவ் தகவல்

[நைரோபி]

கென்யாவில அகதிகள் முகாம்களில் உள்ள சிறுவர்களில் போஷாக்கு குறைபாடு அதிகரித்து வருவதாக யுனிசெவ்வின் போஷாக்கு அபிவிருத்தித் திட்டம் தெரிவித்துள்ளது.

வெளிநாடுகளின் உதவி குறைந்தமையே இதற்குக் காரணம் எனவும் யுனிசெவ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

கென்யாவில் வடமேற்குப் பகுதியில் உள்ள அகதி முகாமகளில உள்ள 3 இலட்சத்து 20 ஆயிரம் பேர்களுக்கு மத்தியில் போஷாக்குக்குறைபாடு நிலவிவருவதாகவும், வெளிநாட்டு நிறுவனங்கள் உதவி வழங்குவதைத் தொடர்ந்தும் குறைத்து வந்தால் பெரும் பாதிப்பு ஏறபடும் அபாயம் உள்ளதாகவும் யுனிசெவ் நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது. [செ-7]

# விடுதலை செய்யாவிட்டால் தற்கொலை செய்வோம்

## உறவினர் எச்சரிக்கை

(சென்னை)

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள இந்தியமீனவர்களை உடனடியாக விடுதலை செய்யாவிட்டால், தாம் தற்கொலை செய்து கொள்ளப்போவதாக மீனவர்களின் உறவினர்கள் அரசை எச்சரித்துள்ளனர்.

மீனவர்களை இலங்கையில் தடுத்து வைத்திருப்பதால் பொருளாதார ரீதியாக தாம் மிகவும் கஷ்டப்படுவதாகவும் இதனால் வேறு வழியின்றி தாம் கூட்டாக தற்கொலை செய்துகொள்ளப் போவதாகவும் மீனவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர். (இ)

# மத்திய கிழக்கில் சமாதான முயற்சி அமெரிக்காவிற்கு இஸ்ரேல் பாராட்டு

(வாஷிங்டன்)

மத்திய கிழக்கில் அமெரிக்கா சமாதானத்துக்காக எடுத்த முயற்சிகளை இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் வுரோன் பாராட்டியுள்ளார்.

அமெரிக்காவில் தற்சமயம் தங்கியிருக்கும் ஏரியல் வுரோன் அமெரிக்க அதிபரை சந்தித்து உரையாடுகையிலேயே மேற்கண்டவாறு பாராட்டுத் தெரிவித்தார்.

அமெரிக்காவின் யோசனைப்படி யுத்தநிறுத்தத்தைக் கடைப்பிடிப்பதாகவும் எனினும் தற்பாதுகாப்புக்காக எதிர்த்தாக்குதலை நடாத்துவோம் என்றும் ஏரியல் வுரோன் தெரிவித்தார்.

அமெரிக்க அதிபர் இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில், பலஸ்தீன-இஸ்ரேல் படையினர் பதட்ட நிலையில் உள்ளனரென்றும் மத்திய கிழக்கில் சமாதானம் ஏற்படா விட்டாலும் ஏதோவொரு மாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்றும் குறிப்பிட்டார். (து)

சூழ்வார் கண்ணாக ஒழுக லான் மன்னவன் சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்.

குறள்

## வலம்புரி

### டாக்டர்கள் வெளியேற்றம்!

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீடத்தில் கல்வி கற்று வெளியேறுவோரில் ஒரு சிலரே யாழ். மண்ணில் கடமையாற்றுகின்றனர். ஏனையோர் யாழ். குடா நாட்டை விட்டு வெளியேறியுள்ளனரென யாழ். போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர் டாக்டர் (செல்வி) நவமலர் கனகரட்ணம் கவலை வெளியிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்து மண்ணில் பிறந்து, யாழ்ப்பாணத்திலேயே கற்று, யாழ்ப்பாணத்து மக்களின் உடலிலேயே நோய்க்கான பயிற்சி எடுத்து விட்டு, மண்ணை-மொழியை-இனத்தை உதறித்தள்ளி விட்டு வெளியேறும் டாக்டர்களை ஒரு கணம் எண்ணும் போது உள்ளம் வெதும்பவே செய்கிறது.

யாழ். போதனா வைத்திய சாலையில் நோயாளர்கள் ஆய்வு கூடத் தவளைகளாகவும், அங்கே பயிற்சி பெறும் மருத்துவ பீட மாணவர்கள் ஆய்வாளர்களாகவுமே இருக்கிறார்கள். இவ் ஆய்வாளர்கள் தமது படிப்பு முடிந்தவுடன் வெளிநாடு சென்று அங்குள்ளவர்களுக்கு சேவை செய்வதன் மூலம் பெருந் தொகையைச் சம்பாதிக்கலாம் என்ற அடிப்படையில் செயற்படின் அஃது தமிழ்ச் சகோதரர்களுக்குச் செய்யும் பெருந் துரோகமாகவே அமையும்.

யாழ். போதனா வைத்திய சாலைப் பணிப்பாளரின் ஆதங்கம், டாக்டர்களின் தட்டுப்பாட்டினால் நோயாளர்கள் படும் அவலத்தை நேரில் கண்டதன் வெளிப்பாடென்பதை நாம் புரிந்து கொள்ளமுடிகிறது. யாழ்ப்பாணத்தில் கற்ற ஓர் டாக்டர் தான் பிறந்த மண்ணுக்குச் சேவை செய்யாமல் வெளியேறுவது அவரவர் மனச்சாட்சியுடன் தொடர்புடையதாக இருந்த போதிலும், தமக்கு விசேட கொடுப்பனவு தரவேண்டுமெனக் கோரி வடக்குக் கிழக்கில் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட அரச மருத்துவர் சங்கம் இது விடயத்தில் காத்திரமான நடவடிக்கை எடுக்க முன் வர வேண்டும்.

அதே வேளை பணிப்பாளர் கூறியது போல் எமது டாக்டர்களின் வெளியேற்றம் குறித்து அரச மருத்துவர் சங்கம் துணிந்து கருத்து வெளியிட வேண்டும்.

## திருமஞ்சத்தில் அம்மன் வீதியுலா வரும் காட்சி

# ஒரு போதும் மறக்க வொண்ணாததாகும்

ஈழமணித் திருநாட்டின் பூர்வீகக் குடிகள் நாகர்கள் என்பதும், அவர்கள் தான் ஆதி திராவிடர்களான தமிழர்கள் என்பதும் வரலாறு. அந்த வரலாற்றினை சரித்திரச் சான்றாகக் நாகர் வாழ்ந்த தெய்வீகப் பூமி இது தான் என்பதை ஆதாரபூர்வமாக நிலை நிறுத்தி சுயம்பு மூர்த்தமாகத் தோன்றி நயினையில் எழுந்தருளி அருள் பாலிப்பவள் தான் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள். நாகர்களால் வழிபடப்பட்ட பூர்வீக ஆலயம் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயம் என்பதும் ஆய்வாளர்களின் ஆய்வின் மூலம் அறியப்பட்ட உண்மை. மூல மூர்த்தமாக எழுந்தருளி அருள் பாலிக்கும் நயினை ஆலயத்தின் மூலக் கருவறையில் ஐந்து தலை நாகமும் அம்பாளும் இணைந்த விக்கிரகம் பல்லாயிரம் ஆண்டு பழமை வாய்ந்தது என்பது, எம். நரசிம்மன் என்ற விஞ்ஞான ஆராய்ச்சியாளரின் ஆய்வின் மூலம் தெரிய வந்தது. எனவே தமிழர்கள் வந்தேறு குடிகள் அல்ல. பூர்வீகக் குடிகளான நாகர்களின் வழித் தோன்றல்கள் என்பதையும், மணித்தீவு, நாகத்து வீபம், நாகதீவு என்பன நாகர் தொடர்புகளின் தொன்மையை புலப்படுத்துவதாலும், இலங்கையின் வடகிழக்கு உட்பட பரந்து வாழ்கின்ற தமிழ்ப்பெயர்கள் "நாக என்ற முதற்சொற் தொடரில்" ஆரம்பமாவதாலும் இலங்கையின் பூர்வீக குடிகள் தமிழர்கள் என்பதை ஐயத்திற்கு இடமின்றி ஆதார பூர்வமான வரலாற்றை தனதாக்கி நயினா தீவில் வீற்றிருந்து அருள்பாலிக்கின்றாள் நாகபூஷணி அம்பாள்.

### அழிவு

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மகத்துவத்துடன் பாரிய ஆலயமாகத் திகழ்ந்த இவ்வாலயத்தையும் இதன் சொத்தான செப்புத்தேர், பவளத் தேர் என்பனவற்றையும் போர்த்துக்கீச ஒல்லாந்த ஆட்சியாளர்கள் அழித்து கடலில் தள்ளினர். அம்பாள் ஆலய வடகிழக்கு கடலில் வரலாற்றுச் சின்னமாக இன்றும் திகழுகின்ற பாம்பு சுற்றிய கல் கருடன் கல் என்ற கடற்பாறைகளை அந்நிய ஆட்சியாளர்களால் அன்று அழிக்க முடியவில்லை. காரணம் பரம்பரைக் கதைகளை உண்மையாக்கி வரலாற்றுச் சின்னமாக இன்றும் காட்சிதருகின்றன. இவ் வரலாற்றுச் சின்னங்களை பேணிப் பாதுகாக்க அறங்காவலர் சபையினர் தீர்மானித்து செயற்படுவது வரவேற்கத் தக்கது.

### தேரும் திருவிழாவும்

நயினை நாகபூஷணி அம்பாளின் வருடாந்த மஹோற்சவம் 1960 ஆம் ஆண்டிற்கு முன் 11 தினங்களாக இருந்தது. அம்பாளின் சித்திரத் தேர் திருப்பணிச்சபையும் அன்று செயற்பட்டது. 1960 ஆம் ஆண்டில் அம்பாளின் வருடாந்த மஹோற்சவம் 16 தினங்களாக மாற்றப்பட முன் 4 ஆம் திருவிழா நயினைவாழ் கொழும்பு வர்த்தகர்கள், சிப்பந்திகளின் திருவிழாவாக இருந்தது. அதி விமரிசையான திருவிழாவாக நடைபெற்று வந்தது. இலங்கை இந்திய கலைஞர்களின் நாதஸ்வரம், சொற்பொழிவு, பண்ணிசை என்பன வருடா வருடம் தவறாது இடம்பெற்று வந்தன.

அன்று 4 ஆம் திருவிழாவாக இருந்த கொழும்பார் திருவிழாவை மஹோற்சவ தினங்கள் 16 ஆக மாற்றப்பட்ட பொழுது அன்றைய அறங்காவலர்சபை 10 ஆம் திருவிழாவாக மாற்றிக் கொடுத்ததுடன் திருமஞ்சம் செய்து இத்திருவிழாவை மஞ்சத் திருவிழாவாக மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டது. முக பொன்னம்பலம் அம்பாளிற்கு திருமஞ்சம் செய்து மஞ்சத்திருவிழாவாக மாற்றி அமைப்போம் என்று உபயகாரர் சார்பாக உறுதியளித்திருந்தார்.

### தீக்கிரையாகின

அன்றைய இளைஞர்களாகிய நாம் அமரர் மு. க. பொ. வுடன் இணைந்து மஞ்சத் திருப்பணிச் சபையை அமைத்து அமரர் செ. கந்தசாமி அவர்களால் அழகிய திருமஞ்சம் செய்யப்பட்டு 12.7.1981 இல் வெள்ளோட்டம் நடைபெற்றது. நான்காம் திருவிழா பத்தாம் திருவிழாவாகி மஞ்சத் திருவிழாவாகியது. ஐந்து ஆண்டுகள் இத்திருமஞ்சத்தில் அம்பாள் வீதியுலா வந்து அடியவர்க்கு அருள் நல்கினாள். 3.3.1986 இல் அரசபடையினரின் அட்டூழியத்தனமான தீ வைப்பால் அம்பாளின் பல இலட்சம் ரூபாய் பெறுமதியான விநாயகர், சுப்பிரமணியர் தேர்கள், திருமஞ்சம், கிழக்குக் கோபுர வாசல் கதவு என்பன தீக்கிரையாகின. இதனால் அம்பாளின் அடியவர்கள் மிகுந்த வேதனையடைந்தனர். அறங்காவலர் சபையினர் எடுத்த முயற்சியின் காரணமாக சிறு தொகையை அரசு வழங்கியது. அறங்காவலர் சபையின் பெரு முயற்சியால் தீக்கிரையான விநாயகர், சுப்பிரமணியர் தேர்கள் படிப்படியாக உருவாக்கப்பட்டு அம்பாள் மீண்டும் தமது புத்திரர்கள் இருவரும் தேரில் தன்னோடு பவனிவரும் காட்சியை நல்கினாள்.

### புதுமஞ்சம்

அறங்காவலர் சபையினர் உபயகாரர்களின் சிறிய தொகை உதவியுடன் அழகிய திருமஞ்சம் ஒன்றை அம்பாளிற்கு மீண்டும் உருவாக்கினர். அரலியூர் சி. அமரசிங்கம் முழுமையாக தமது கலைத்திறமையை இந்த மஞ்சத்திலே முழுமையாக வெளிப்படுத்தியுள்ளார். "மரத்தை மறைத்தது மாமத யானை மரத்துள் மறைந்தது மாமத யானை" என்ற திருமூலர் திருவாசகம் ... மரத்தை மறைத்து நயினை அம்பாளின் திருமஞ்சம் கலைமஞ்சமாக துலங்குகின்றது. 11-6-2000ல் புதிய மஞ்சம் வெள்ளோட்டம் விடப்பட்டது. இந்த மஞ்சம் ஒரு கலைப் பொக்கிஷம் என்பதில் ஐயமில்லை. நாட்டுச் சூழ்நிலை காரணமாக அன்று நாம் சிற்பக்கலைஞர்களை உபயகாரர் சார்பாகக் கௌரவிக்க சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. அந்த நற்பணியைச் செய்வதற்கு அம்பாள் இவ்வாண்டு திருவருள் பாலித்துள்ளாள்.

### சிற்பச்சிறப்பு

அம்பாளின் கலைப் பொக்கிஷமான செப்புத்தேர், பவளத்தேர் என்பன அந்நியரால் கடலில் தள்ளப்பட்டதாக கர்ண பரம்பரைக் கதைகள் மூலமும், அம்பாளின் திருத்தேரில் வடிக்கப்பட்டுள்ள சித்திர வடிவமைப்பிலும் காண முடிகிறது. 1958 இலும் 1986 இலும் நடந்த நிகழ்வுகளை ஒப்பிடு நோக்கினால் கர்ண பரம்பரைக்கதைகள் வரலாற்றுச் சான்றுகள் என்பதையும், 1958-1986 நிகழ்வுகள் பல ஆண்டுகள் கழித்து கர்ண பரம்பரை கதை போல் சி. அமரசிங்கம் போன்ற சிற்பக்கலை வல்லுநர்களால் கலைப் பொக்கிஷமாகவும் தீட்டப்படலாம் என்பதற்கு அம்பாளின் சித்திரத்தேர், திருமஞ்சம் சான்றாகும். அம்பாள் சிற்ப வேலைப்பாடுகள் அமைந்த திருமஞ்சத்தில் வீதியுலாவரும் இத் தெய்வீக திருநாளில் நாட்டில் சாந்தியும் சமாதானமும் நிலவப்பிரார்த்திப்போமாக!

**நாகமணி கோபாலகிருஷ்ணன்**

## காணாமற் போனோர் பற்றிய

# விசாரணைகளுக்காக அழைக்கப்பட்டோர் விபரம்

[யாழ்ப்பாணம்]

1996,97 ஆம் ஆண்டு காலப் பகுதியில் காணாமற் போனோர் சம்பந்தமாக விசாரணையினை மேற்கொண்டு வரும் விசேட புலனாய்வுப் பிரிவினர் பின்வரும் காணாமற் போனோர் தொடர்பாக முறைப்பாடு செய்தவர்களை, மற்றும் பெற்றோர் சாட்சிகளை யாழ். பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொண்டு சாட்சிகளை வழங்குமாறு அழைக்கப்பட்டுள்ளனர்.

★ சூ. சபபிள்ளை அந்தோனிப்பிள்ளை [கோ. இல பி 442] 13, புதிய பூங்கா வீதி குருநகர்.

★ பிறஞ்சிஸ் உதயன் பெளாசிஸ [கோ. இல. பி-433] குருநகர்.

★ யேசுநாதன் அமன் கிலோ [கோ. இல.404] குருநகர்.

★ மனுவில் அத்தோனி [கோ. இல. பி-420] 26, மத்திய வீதி. குருநகர்.

★ அன்ரன் மிச்வில் கொல்வின் [கோ. இல பி- 427] 17/7, கடற்கரை வீதி, குருநகர்.

★ முருகேச ஜெயராஜ் [கோ. இல. பி- 350] 10, பூம்கார் வீதி, குருநகர்.

★ றொபேட் கெனடிராஜா [கோ. இல. பி- 9/145] 39, சாந்த செபஸ்ரின் வீதி, குருநகர்.

★ ஏ. கே. ரகுமான் [கோ. இல. பி-279] 79, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம.

★ அருளராஜ் அனிராஜ் [கோ. இல பி- 238] 13, மத்திய கிழக்கு வீதி, குருநகர்.

★ தேவத ஸ்சுரேஸ் குமார் [கோ. இல. பி- 9/219] 16/6, மத்தியூஸ் வீதி. யாழ்ப்பாணம்.

★ துரைசிங்கம் செந்நிலந்தன் [கோ இல 9/45] 6, வில்லுத்தை வீதி, அரியாலை

★ ராஜேந்திரன் குகஸ்றூன் [கோ. இல பி-361] செல்லன் லேன் நல்லூர்.

★ மகேந்திரம் பாபு (கோ. இல. பி-346, 697, கச்சேரி நல்லூர்

★ செளதாசன் றெஜினோட் றூபராஜ் (கோ. இல 09/73) 310, பருத்தித்துறை வீதி நல்லூர்

★ ரசியா கைலேஸ்வரன் கோ. இல. பி-364, அரியாலை மேற்கு

★ சின்னையா பரமநாதன் (கோ. இல பி 33), 12, கொம்பனி வீதி அரியாலை

★ லலிதா சண்முகநாதன் (கோ. இல. -பி-406) 25, புறூடி வீதி அரியாலை

★ கந்தசாமி ரஜிதன் (கோ. இல. பி-9/58) 24/2 றக்கா வீதி சுண்டுகுளி

★ மாணிக்கம் சந்தையா (கோ. இல. பி-474) குடத்தனை மேற்கு

★ சந்திரசேகரன் லோகேஸ்வரன் (கோ. இல. பி-9/206) கைதடி கிழக்கு

★ தர்மலிங்கம் கருணாகரன் (கோ. இல பி 448) கைதடி நாவற்குழி மேற்கு

★ மஜீ குருலேயவன் (கோ. இல பி-278) யாழ்ப்பாணம

★ கந்தசாமி ரவிசந்திரன் (கோ. இல பி-09/223, மீசாலை மேற்கு

★ பெனிபஸ் அல்விஸ் (கோ. இல. பி-478) உருமபிராய் கிழக்கு

★ கந்தையா சிறிஜெனான் (கோ. இல. பி-09/92) கோண்டாவில் கிழக்கு

★ துரைராஜ் சிவகுமார் (கோ. இல. பி-09/32) கோண்டாவில் வடக்கு

★ லாலேணி மகேஸ்வரன் (கோ. இல. பி-09/219) 3/2, 2ம் குறுக்கு தெரு கொழும்புத்துறை

★ ஜெமிஸ் பிரபாகரன் (கோ. இல- பி-336) 105, கோவில்வீதி சுண்டுகுளி.

★ வேலுப்பிள்ளைஇன்சுரன் (கோ. இல-பி 395) குடத்தனை.

★ அமலன் விஜயகுமாரன் [கோ இல பி-323] கோண்டாவில் கிழக்கு.

★ அன்ரன் நிக்சன்குமாரன் (கோ இல. பி-397 24 ஜேம்ஸ் வீதி, யாழ்ப்பாணம.

★ சிவமுத்து அன்ரன் ஜெபக்குமார [கோ இல பி-09/90] 136 ஆதர்குடி வீதி கந்தர்மடம.

★ செல்லன் குலேந்திரன் [கோ இல-பி-09/26] கறுப்பு வீதி, யாழ்ப்பாணம

★ சுப்பிரமணியம் பாலவடிவேலன் [கோ இல-பி-288] யாழ்ப்பாணம.

★ அன்ரனி யூலியன் [கோ. இல-பி- 393, 6, 3. மவுண்கார்மல யாழ்ப்பாணம்

★ தேவதாஸ் அந்தோனி ஜெசிலன் [கோ இல பி-09/13] 5/3 ஈச்சமோட்டை யாழ்ப்பாணம்

★ கந்தசாமி அழகரத்தினம் [கோ. இல. பி-09/25] யாழ்ப்பாணம.

★ பொன்னையா தர்மலிங்கம் (கோ இல பி-439) மேற்பலி மிருசுவில்.

★ ரி அம்பிகைபாகன் (கோ இல பி-434) குப்பிளான் தெற்கு; [உ-10]

## அம்பாறை இளைஞன்
# அதிரடிப் படையினரால் சுட்டுக் கொலை

(மட்டக்களப்பு)

அம்பாறை எல்லை கிராமமான 31 ஆம் கொலனியில் இளைஞர் ஒருவர் விசேட அதிரடிப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

சுட்டுக் கொல்லப்பட்டவர் ஆறுமுகம் ஆனந்தராஜா (வயது 23) என அடையாளம் காணப்பட்டுள்ளார்;

இவர் வயலில் வேலை செய்து கொண்டிருந்த சமயம் விசேட அதிரடிப் படையினரால் அழைத்துச் செல்லப்பட்ட தாகவும பின்னர் சூட்டுக் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது. (உ-5)

## காணாமற் போனவர்கள் பற்றிய
# விசாரணைகளை நடத்த புதிய குழு வருகை

(யாழ்ப்பாணம்)

1996, 1997 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் காணாமல் போனவர்கள் தொடர்பான விசாரணைகளை நடத்தவென விசேட புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் குழு ஒன்று நேற்று முன்தினம் கொழும்பில் இருந்து யாழ். வந்து சேர்ந்துள்ளனர்.

கடந்த ஒருமாதகாலமாக இங்கு தங்கியிருந்து விசாரணைகளை மேற்கொண்டு வந்த குழுவினர் அண்மையில் கொழும்பு திரும்பியதை அடுத்தே.

காணாமற் போனவர்கள் தொடர்பான கோவைகளுடன்பி. அததப்பத்துதலைமையிலான விசேட புலனாய்வுப் பிரிவுக்குழுவினர் இங்கு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. [உ-10]

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். இணுவில் மத்திய கல்லூரி நிறுவுநர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் அதிபர் துரைஎங்கரசு தலைமையில் இன்று பி. ப2.00மணிக்கு கல்லூரி திறந்தவெளி அரங்கில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில், பிரதம விருந்தினராககோப்பாய்-உடுவில்பிரதேசசெயலர்க.கேதீஸ்வரனும், சிறப்பு விருந்தினராக உடுவில் கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் அ. தற்பரானந்தனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிறுவுநர் நினைவுப் பேருரையை யாழ். அத்தியார் இந்துக்கல்லூரி உப அதிபர் காலநிதி தாமோதரம் பிள்ளை அமிர்தலிங்கம் நிகழ்த்துவார்.

திருமதி திருமலர் ராணி கேதீஸ்வரன் பரிசில்களை வழங்குவார் (உ-6)

## வீடியோ படக்காட்சி

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கி வரும் திரைப்படக் காட்சித் தொடரில், 1999 ஆம் ஆண்டிற்கான சிறந்த திரைப்படத்திற்கான விருது உட்பட 5 OSCAR [ஒஸ்கார்] விருதுகளை பெற்ற S'M MENDES இயக்கிய AMERICAN BEAUTY என்ற திரைப்படம் இன்றுகாலை 10.00 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படும் எனவும் ஆர்வலர்கள் எவரும் பங்குகொள்ள முடியும் எனவும் புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவிக்கின்றார். [செ]

## பின்வரிசை..

தேசியக்கட்சியினால் கொண்டுவரப் பட்டுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பாக அவர்மேலும் கருத்துத் தெரிவிக்கையில்.

ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கா தலைமையில் அரசாங்க எம்பிக்கள் அனைவரும் நம்பிக்கை இல்லாப் பிரேரணையைத் தோல்வியடையச் செய்வதற்கு திடசங்கற்பம் பூண்டுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளனர். (வ)


**நாகம்ஸ்**
(சுன்னாகம்)
இன்று முதல்
சுப்பர் ஸ்ரார் விஜயசாந்தி
சரத் குமார், வெங்கடேஸ்
நடித்த
**முதலமைச்சர் ஜெயந்தி**
வெண்திரையில்
முதன்முதல்
சுப்பர் ஸ்ரார்
விஜயசாந்தியின் படம்
(ரீல்ஸ் வெளியீடு)
தினசரி 11-00, 2-30
சனி, ஞாயிறு6-30 மட்டும்
(3264)



**ராஜா**
யாழ்ப்பாணம்
லக்கிஸ்டார் அஜித்
(9 வேடங்களில்)
வசுந்தராதாஸ்,
மீனா, நக்மா
மற்றும் பலர் நடித்த
STR பிலிம்ஸ்
**சிட்டிசன்**
தினசரி 10-30, 2-00
5 00 [பு. நே.]
(கி-2125)


## மருதானைச் சம்பவத்தின் எதிரொலி
# தலைநகரில் தமிழ்ப்பெண்கள் வீட்டுக்குள் முடங்குகின்ற நிலை

(கொழும்பு)

மலையகத் தமிழ்ப் பெண் மிகவும் கொடூரமான முறையில் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட காட்டுமிராண்டித்தனமான செயலை தமிழ்ப்பெண்கள் தலைநகரில் நடமாட முடியாத நிலையைத் தோற்றுவித்துள்ளது.

மருதானைச் சோதனைச் சாவடியில் தமிழ்ப் பெண் பொலிஸார் மூவரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் இவ்வாறு குறிப்பிடப் பட்டுள்ளது,

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள தாவது:

வேலியே பயிரை மேய்வது போல் மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பை வகிக்கும் பொலிஸார் இவ்வாறு கொடூரமான பாலியல் வன்முறையில் ஈடுபடுவதை அனுமதிக்க முடியாது.

இக்கொடிய செயலில் ஈடுபட்ட பொலிஸார் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதுடன் இனிமேல் இவ்வாறானசம்பவங்கள் நடைபெறா வண்ணம் நடவடிக்கைஎடுக்க வேண்டும்.

இச்சம்பவத்தில் எதிரொலியாக தலைநகரில் தமிழ்ப் பெண்கள் தலைகாட்ட அச்சமுற்று வீடுகளுக்குள் முடங்கும் நிலை பரவலாக ஏற்பட்டிருக்கிறது. (உ)

## இன்று இடம் பெறாது

ஊர்காவற்றுறைப் பிரதேசெயலர் பிரிவில் சூழல் பாதுகாப்பு குழு அங்குரார்ப்பண நிகழ்வுநடை பெறமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது (உ-75)

## இறுதி சுற்றுப் போட்டி

உடுவில் அண்ணாவிளையாட்டுக்கழகம் வலம்புரியின்ஆதரவுடன் நடத்திவரும்தாச்சிச் சுற்றுப்போட்டிகளில் பெண்களுக்கான இறுதி ஆட்டத்தில் இன்றுபிற்பகல்யாழ் பல்கலைக் கழகபெண்கள் அணியும் மல்லாசகிராம முன்னேற்றச்சங்க பெண்கள் அணியும்கழகமைதானத்தில் மோதவுள்ளன, வ)

## நெடுங்கேணியில்

னால் மீட்கப்பட்டு தற்போது புலிகளின் கட்டுப்பாட்டில் இருப்பதும் குறிப்பிடத்தக்கது. (வ)

## மேல்மாகாணத்தில்

துறை ஆகிய மூன்று மாவட்டங்களிலும் ஒரே நேரத்தில் 35 இடங்களில இவ் ஆர்ப்பாட்டப் பேரணிகள் நடைபெறவிருப்பதால்அரசுபலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்திருப்பதுடன், எதனையும் சமாளிக்கக் கூடிய விதத்தில் படைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வ)

## இ. தொ. கா.,

இல்லாத் தீர்மானத்தை அடுத்து எழுந்துள்ள நிலைமை தொடர்பாக அமைச்சர்ஜயரத்தினா அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானுடன் பேச்சுவார்த்தைநடத்தியிருந்தார். (வ)

## வன்னியிலிருந்து..

குழுவினரிடம் அறிவித்துள்ளனர்.

இராணுவத்தினரால் சந்தேகத்தின பேரில் கைது செய்யப்படு வோர் கிளர்ச்சி தடுப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்படுகின்றனர்.

இளைஞர்கள் யுவதிகளின் கைதுகள் தொடர்பாக ரசீதுகளும் வழங்கப் பட்டு வருகிறது. இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பிரதேசத்தில் இருந்து வரும் இளைஞர் யுவதிகளேசோதனைச்சாவடிகளில் வைத்தே இவ்வாறு கைதுசெய்யப் பட்டுவருகின்றனர் என்றும் இதனால் வன்னியிலிருந்து வருவோரின் எண்ணிக்கை குறைந்து வருவதாகவும் தெரிவிக்கப் படுகிறது. [வ]


உ
சிவமயம்



தொல்புரம் மேற்கு-மன்னதோட்டம்
**அருள்மிகு ஸ்ரீ ஜெகஜோதி அம்பாள்**
ஆலய புனராவர்த்தன
சம்புரோக்ஷண அஷ்டபந்தன பிரதிஷ்டா
**மஹா கும்பாபிஷேகம்**

★ கிரியாகால விபரம் ★


**ஆனிமீ 16ம்நாள் (30 06.2001) இன்று சனிக்கிழமை காலை 8 00மணி**
விநாயகர்வழிபாடு, பூர்வாங்ககிரிகைகள், சாந்திகள் மாலை 5-00மணிமுதல் கோவர்சம் முதல் கும்பயாக சாலபிரவேசம் இரவு 9-30மணிக்கு தூபிஸ்தாபனம் யந்திரஸ்தாபனம், பிம்பஸ்தாபனம்

**ஆனிமீ 17ம் நாள் (01.07.2001) ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 முதல் நண்பகல் 12.00 மணிவரை அடியார்கள் எண்ணைக்காப்பு சாத்துதல்**
மாலை விம்பசுத்தி, பிம்பரட்ஷா பந்தனம்பரிசாகுதி நியாசங்கள் தீபாராதனை வேதஸ்தோத்திர தேவார பாராயாணம்;

**ஆனிமீ 18ம் நாள் (02.07.2001) திங்கட்கிழமை**
மகா பூர்ணாகுதி, தீபாராதனைகள் பலிகஸ் தானாதிகஸ் மேற்குறிப்பிட்ட சுபமுகூர்த்தத்தில் தூபிகளுக்கும் அம்பாளுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் சகல மங்கள வாத்தியங்கள் சகிதம் **மஹாகும்பாபிஷேகம் நடைபெறும்** தொடர்ந்துதசமங்கள தரிசனம் மஹா அபிஷேகம் விஷேச பூசைகள் அருளாசியுரைகள்;

தொல்புரம் ஆலயபரிபாலனசபை
(ெ/ 2148)





மின்னிடும் அசல் 22 கரட் தங்கநகைகளை உங்கள் எண்ணம்போல் தெரிவுசெய்திட
**நியூ நகுலா ஜுவல்லறி**
74, கஸ்தூரியார் வீதி, - - - யாழ்ப்பாணம்
**நியூ லலிதாஸ் ஜுவல்லறி**
171, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [கி-3137]
**நகுலா நகைமாடம்**
241G, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்


இப் பத்திரிகை "வலம்புரி" அச்சோ நிறுவனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர் களது அச்சகத்தில் 2001ம் ஆண்டு யூன் மாதம் 30-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.